YUKTHISAAKARAM - MOOLAM

யுக்தி சாகரம் - மூலம்

மறை முடிவுப் புலவர்
அடியார்க்கடியார்
சுவாமிகள்
என்னும்
ஸ்ரீ சுயம்பிரகாச
திருப்பதி சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளியது.

✻

பதிப்பித்தளித்தது :
...ரியரின் மாணாக்கர்,
...இராமசாமி முதலியார்,
...வர் நிலையம், கரூர்.

... 1950 [Registered Copy Right

513
573
4.50
MADRAS
1950
Q2:417
N50
69121

உ

எல்லாம் ஒன்றே. ஓம் ஒன்றே எல்லாம்.

கணபதி துணை.

ஸ்ரீலஸ்ரீ அடியார்க் கடியாரென்னுந் திருப்பெயரோடு பதினொரு திருநாமங்கள் பூண்ட

ஸ்ரீ சுயம்பிரகாச திருப்பதி சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

பதினொரு திருப்பெயர்கள் கொண்ட உயர் ஞான பூமியெனும்

யுக்திசாகர மூலம்

இஃது

இந்நூலாசிரியரின் மாணாக்கர் கருவூர் திருவள்ளுவர் நிலையம் கோ. தெ. இராமசாமி முதலியாரால் 1932-ல் அச்சியற்றி வெளியிடப்பட்ட பழமொழிப் போத மென்னும் நூலின் கடைசி 205-ம் பக்கத்தில் பிரசுரித்தபடி கருவூர் திருவள்ளுவர் அச்சகத்தில் சுத்தப் பிரதியாகப் பதிப்பிக்கப்பட்டு ஞான சாதகரின் நன் மையைக் கருதி இலவசமாக வழங்கப்பட்டது.

கலியுகம்	தமிழ்	ஆங்கிலம்
5052	விக்ருதி சித்திரை	1950

69/121

இன்னூலாசிரியரின் திருநாமங்கள்.

சுயம்பிரகாசன்

அடியார் கடியார்

திருப்பதி சுவாமி

போதகுரு

கண்ணுறங்கான்

பற்றற்ருன்

காசுதொடான்

போதவானர்

மறைமுடிவுப்புலவர்

மாசுபடான்

ஞானதேசிகன்

இன்னூலின் திருப்பெயர்கள்.

உண்மையறிவுலகம்

அறிவுக் களஞ்சியம்

ஞானலோகம்

வேதாந்த சமுத்திரம்

விழிப்பறிவுக்கடல்

ஞானநிதியாழி

உயர்ஞான பூமி

உயரறிவுப் போதகம்

யுக்திசாகரம்

ஞானத்தேமாலை

யூகவாரி

Q2;417
N50

இன்னூலாசிரியரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

1. பழமொழிப் போதகம்
2. யுக்தி சாகரம்
3. தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்
4. வித்தியாகீதை
5. பத்திநெறி
6. திருநாமமாலை
7. முத்திநெறி
8. சிவ ருத்திர விமர்சனி
9. மாதர் விஷயம்
10. சதாசிவபிர்ம ஸ்தோத்திரம்
11. தேவி ஸ்தோத்திரம்
12. விவேக சித்திரம்
13. தத்தாத்திரேயர் ஸ்தோத்திரம்
14. மாரியம்மன் தாலாட்டு
15. சகுந்தலா அல்லது காதல் வெற்றி (நாடகத் தமிழ்)

இன்னுஞ் சில் நூல்கள் கிடைக்கவில்லை அவை இருப்பின் கொடுத்துதவினல் அச்சியற்றி வெளியிடுவதோடு அன்னவருக் கடிவணங்கி மனமுவந்து போற்றுகிறேன்.

கோ. தே. இராமசாமி முதலியார்,
திருவள்ளுவர் நிலையம், கருவூர்.

பதினொரு திருநாமங்கள் கொண்ட ஸ்ரீ சுயம்பிரகாச

திருப்பதி சுவாமிகள்

தோற்றம்: 1873 ஸ்ரீமுகா மார்கழி-மீ 4-உ விசாகமீன்

ஒடுக்கம்: 1937 ஈசுர ஐப்பசி 26 உ அட்டமி யவிட்டவுடு

உ

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ சுயம்பிரகாச திருப்பதி சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய ஞான உலகம் என்னும்

யுக்திசாகரம்-மூலம்.

விநாயகர் காப்பு.

குறள் வெண்பா.

சீரார் பரப்பிரமத் திவ்யப் பிரகாசம்
ஆரார் விநாயகர்காப் பாம். 1

சத்தே சகஞ்சித்துத் தான்சிவ னானந்தம்
ஒத்தாய வீசனென வோர். 2

அறுசீர் விருத்தம்.

பூதபௌ திகவுருவாம் பலகோடி சடத்திரண்மட்
 புனையண் டங்கள்
மீதுமிது படர்நினைவாம் பின்னுசத் திப்புனலான்
 மேவு மிவ்வா
றீது தனை ஞானமெனு மபின்னுசத் திக்கனல்சூழ்ந்
 திடவு மேலாய்ப்
பேதமற வெலாந்தானு வுறும்பரன்கான் மிசைமேன
 பிரமம் விண்ணே. [னப் 3

வெண்பா.

அகங்கரமண் சித்தநீ ராம்புத்தி செந்தீ
மிகுந்தமனங் காற்றுள்ளம் விண்ணே—புகுந்தவபி
மானமா லோசனைதீர் மானஞ்சங் கற்பமறி
வானமுறை யைம்புலன்கா ணங்கு. 4

கலி விருத்தம்.

இனைச டச்சேற் றிடைப்பிள்ளைப் பூச்சியும்
நினைவு நீரி னிகழ்தா மரையிலை
முனையஞ் ஞான முகிலி னிரவியும்
தனிமை யாத்தும தத்துவ மாவதே. 5

வெண்பா.

ஆன்மா நெருப்பா மதினின் றெழுஞ்சகத்துத்
தான்மூ டிடும்புகையாஞ் சங்கற்பப்—பான்மரத்தை
உற்றிடினீ தாகு முறுமுனுமுற் றேநனிவெந்
தற்றிடினு மப்புகையின் றூல். 6

உயிர்க்கலங்க ணீர்தன்னி லோர்விருத்தி ஞான
அயிர்க்கதகத் தூளிட் டவித்தைதச்—செயிர்ச்சேறு
போக்கி னதனுடனே போமக் கதகத்தூள்
நீக்க மறுசிவந்தெண் ணீர். 7

விடயத்திற் போமனங்கீழ் மேவு முதகம்
நடையற்ற வீடுபெறு ஞானம்—படர்மேற்செல்
வன்னியா மேசீவன் வாயுவா மாகாயம்
மன்னுமான் மாவா மதி. 8

கலி விருத்தம்

இதய நீர்கலங் கின்னத னூடுசிற்
கதிர்பன் மாறுருக் காணல் விடயமால்
அதுக லங்க லறிற்சிற் கதிரவன்
எதிர்த லுள்ளவா றீதுபே ரின்பமே. 9

வெண்பா.

சுத்தவறி வாகாயத் தோற்றமாஞ் சங்கற்ப
மத்தியத்தான் முற்றுணர்வா மாயைச்சொர்க்-கத்துட
அற்பவுணர் வாகு மவித்தையெனும் பாதலமும் [னே
கற்பிதமா மவ்வெளிமெய் காண். 10

அனந்தன் பிரகிருதி யாம்புவன மாயை
மினும்பொன் வரைசாத்து விக—மனம்பெரிதாம்
அட்டகிரி யெண்குணங்க ளாழிமறை வீழ்நதிகள்
இட்டகலை மேகமிறை யே. 11

பதின்மூன்குசீர் விருத்தம்

பரஞான வடவையனன் மேவுறச் சலனவுவர்
படுசுத்த சங்கற்பமாம்
பௌவம்வளீ சத்யசங் கற்பமா நிலமீது
பலசித்த மென்னும்வரைகள்

இரியாம லுறநா லுணர்ச்சிச் சராயுசம
தில்லாத வுணர்வண்டசம்
இழியுணர்ச் சிச்சுவே தசமுணர் விலாததா
யிடுமுற் பிசத்தேதுவின்

ஒருவாத சகசானு பூதியினர் நரர்நா
லுரைத்தகன் மத்தர்மாக்கள்
ஒழிகன்ம முடையர்பற வைகடீய கன்மத்த
ரூர்வன வெளிக்குன்றாய்த்

தெரிதீய கபடகன் மத்தர்நீர் வாழ்வன
திரட்சோம் புளார்தாபரம்
திகழ்துரியம் வளியதீ தம்வின் சமாதியினர்
தேவரிப் புவனிபரனே. 12

அறுசீர் விருத்தம்.

அவிசார முவர்வேலை சிரவணந்தான் கருப்பஞ்சாற்
றம்பு ராசி
தவியாத மனனந்தேன் கடனிதித்தி பாலாழி
சவிகற் பானு
பவமாகுந் ததிவாரி நிர்விகற்ப வனுபவநெய்ப்
பாரா வாரம்
திவசாட்சாத் காரஞ்சுத் தோதகசிந் திவையுறும்விர்த்
திகளேழ் தீவே. 13

பதினான்குசீர் விருத்தம்.

நவிலுமந் தக்கரண மாமேரு மணிதர்பவ
நாவலந் தீவிவர்கண்முன்
நண்ணுவா சனையுப்பு வாரிவா னோர்பிறவி
நளிர்சாக மிவர்வாதனை

எவமிலாப் பாற்கடல் விலங்கின் பவங்குசை
யிவற்றின்வா சனைதயிரலை
எற்றபுட் பிறவிகிர வுஞ்சமிவை வாதனை
யிசைந்தநெய்க் கடலூர்வன

பவமதோ சான்மலி யிவற்றின்வா சனைகருப்
பஞ்சாறு நீர்வாழ்வவுற்
பத்திகோ மேதமிவை வாதனை மதுத்தா
பரப்பவம் புட்கரமிவை

கலியும்வா சனைசுத்த நீர்மலைப் பிறவிகன
கப்புவனி மாயையதுசக்
கரவாள கிரிபகுதி யிருள்புவி பெரும்புறக்
கடலபினை தூரியமோடே. 14

கலி விருத்தம்.

அட்ட செல்வத் தழுந்துதல் கண்டமோ
ரெட்ட தாகு மிவற்றின் கருமமே
இட்ட வெண்கிரி யென்பர்சற் கன்மநேர்
பட்ட தேநற் பரதகண் டம்மரோ. 15

அறுசீர் விருத்தம்.

அரசியலி னழுந்தலிளா விரதஞ்சுற் றம்பத்தி
ராசு வந்தான்
மருவடிமைத் திரள்கேது மாலமிரத் தினங்குருவாம்
வருடஞ் செம்பொன்

இரணியகண் டஞ்சாலி யிரமியம்வா கனமரியென்
றியம்பு கண்டம்
பருகுசுதர்ச் செல்வமயல் கிம்புருடஞ் சற்கன்மம்
பாரத கண்டம். 16

வெண்பா.

பரனு மசைவு பசுத்திரைக ளந்தக்
கரணக் குமிழிகளுங் காணிக்—கிரியத்
துளியும் விடயச் சுழிகளுமா மேனும்
வெளியாஞ் சிவசிந்து வே. 17

எண்சீர் விருத்தம்.

சடத்துவமா முவர்பொருந்து மாயைகட லவித்தை
தரங்கமதி குமிழிமனந் துளிபொறிக ளுரையே
திடப்படும்வான் றிமிங்கிலகி லஞ்சதுர்ப்பூ தங்க
டிமிங்கிலம்பௌ திகந்திமிகோ பங்கள்சுறு மீனம்
தடுக்குமவா முதலைபிற துர்க்குணங்கண் மற்றைச்
சந்துக்கண் மறைமுடிவு வங்கம்பூ ருவநூல்
வடுப்படுதெப் பங்குருமீ கானுயிர்வீழ்ந் திறவா
வகையுழல்வோர் பரன்காற்றுப் பிரமமெழிற்
[கரையே. 18

அறுசீர் விருத்தம்.

ஆரியன் வருணன் வேத மளக்கருண்
டெழுந்தன் சொற்கார்
பூருவ பட்ச வுப்புப் போக்கியே
புகழ்சித் தாந்தம்
சரமா மறைமுமுட்சு விதயநற்
பூமி ஞானம்
சிரிய பைங்கூழ் மோட்சஞ் சிறந்திடும்
விளைவு தானே. 19.

வஞ்சி விருத்தம்.

தகைவிசும் பொருதிமி தன்னைநங்
கிகறிமிங் கிலமன மீதுணும்
வகைதிமிங் கிலகில மாயைதான்
நிகழ்பெருங் கடல்பர தெய்வமே. 20.

எழுசீர் விருத்தம்

பெத்தரிப்பி யாயிரம் பிறங்கமுத்தி காமியாஞ்
சுத்தியொன்றி தாயிரத் தொகைக்குளோர் வலம்புரி
சித்தசாத கன்சகத் திரத்திநிற் சலஞ்சலம்
முத்தனேக னின்னரன்ன மொய்மெய்பாஞ்ச சன்ய
[மே. 21

அறுசீர் விருத்தம்

சீவன் முத்தி வரிகரை
திகழு மேரிக் குட்பாகம்
பாவும் விதேக முத்திவெளிப்
பாகம் பெத்தங் கடல்பிரமம்
தாவு மலைகள் சிற்சத்தி
தக்க சுழியீச் சுரன்குமிழி
ஆவ துயிராங் துளிகணினை
வாகு நுரையிங் திரியமரோ. 22

கலி விருத்தம்

இடைவி டாம லியலு நிதித்தியின்
படிவம் யாமப் பரம்பரம் யாமெனல்
மிடியில் சத்துவ விர்த்தியிக் கங்கையை
அடைவர் பாவ வவித்தையற் றாரரோ. 23

கட்டளைக் கலித்துறை

இரக்கங் குமரி மகிழ்ச்சிகோ தாவரி யேபொறுமை
நரர்க்குநற் காவிரி யுற்சாக மாதல் நருமதையே
சரச்சு வதியா றபேட்சை விரக்தி தனியமுனை
திரத்துறு சாந்தம் பகீரதி சத்தத் திருநதியே. 24

கலிவிருத்தம்

தங்கு தாமிர பன்னி தருமநீர்
துங்க பத்திரை சுத்தி கிருட்டிணை
மங்கி லாத மதியுயர் சிந்துவோ
சங்க மற்ற தவநிலை தானரோ. 25

வெண்பா

விடய நதியிழுப்பின் மேவுவரோ வஃதி
னுடனேவை ராக்கியமென் றோதுங்—கிடனால்
எதிர்த்தகன்று சாந்தி யெனுங்கரையைச் சேர்வார்
விதிக்கெதிரென் னென்றே விழார். 26

மெய்சிரத்தைக் கோலூன்றி மேற்செலச்சிந் தைப்
[புணையை
இச்சகத்தின் வாசனையாற் றிற்குறுக்கே-உய்ச்சுயிராம்
அன்னேன்முத் திக்கரையே றுதங் நதியிடைப்போம்
என்னே விராசதப்போக் கின். 27

ஆற்றி னிறங்கின்மே டன்றிச் சுழிமடுவோன்
றாற்றத் துறவதிலொவ் வோரவத்தை—ஏற்றிடுதல்
தன்னிலைவிட் டுள்ளஞ் சகநோக்கி லிச்சைவெறுப்
பின்னவிவற் றென்றுறுத லே. 28

கலி விருத்தம்

தனிவி சாரணைச் சாக்கிரஞ் சொர்க்கமாம்
மனவ சத்துறு சொற்பன மத்தியம்
அனுமஞ் ஞானச் சுழுத்திபா தாளமீ
தனுப விப்பர்விண் ணார்நரர் நாகரே. 29

எழுசீர் விருத்தம்

சூக்கும வகந்தை யதலம்யா னென்று
தோன்றுதல் விதலம்யா னெனதாஞ்
சாக்கிரஞ் சுதலம் புதியவுட் சிந்தை
தனிநித லந்தரா தலமோ
தூக்கணு மகாத லங்கழி வுன்னல்
சுழுத்திபா தாளமீங் குறைவோர்
ஆக்குநற் றெழிலர் நாகர்மிச் சிரத்தா
ரசுரர்தீ வினையர்தைத் தியரே. 30

அறுசீர் விருத்தம்

சுகவிச்சை பூமிவிசா ரணைபுவலோ கஞ்சிந்தை
சுருங்கல் சொர்க்கம்
தருசத்தின் மனமிசைதல் மகாலோகஞ் சகமறுத்தல்
சனலோ கஞ்சீர்

திகழ்சற்சிற் சுகமாத நவலோக மதிதஞ்சத்
தியலோ கம்பின்
மகிழ்பெத்தர் முமூட்சுச்சா தகர்வித்து வரன்வரி
வரிட்டன் வாழ்வோர். [யான் 31

நலிமறதிப் பிரளயநீர் சுபேச்சைவிசா ரணை தனுமா
னசியா மேன்மூன்
றுலகினும்பொங் குபுசத்து வாபத்தி யெனுநாலா
முலகிற் றுவ
அலருமவண் வாழ்பிரம வித்துக்க ளனுந்தவரைந்
தாமு லோகத்
தலமெனுநல் லசஞ்சத்தி யாம்பிரம சமாதிநிலை
சார்ந்து வாழ்வார். 32

கலி விருத்தம்

அறிவு புண்ணிய மாமறி யாமையே
சறுகு பாதகஞ் சத்துவஞ் சொர்க்கமாம்
பொறியி ராசதம் பூமி தமோகுணம்
நிறுவு பரிதல நிர்க்குண முத்தியே. 33

எழுசீர் விருத்தம்

பிணிக ழுதர் முடிவு நாள்
பிடித்த காலன் மரணமோ

இணை யிலா நமன் கருப்ப
　　மேய்த லேழு நிரயமே
அணவு தேக புத்தி யோ
　　டமுங்கல் மண்ணின் வாழ்வுபின்
உணர்வு மேவி யான்ம புத்தி
　　யொன்றல் விண்ணின் வாழ்வரோ. 34

அறுசீர் விருத்தம்

தந்தையின்வீ ரியவிரவு ரவந்தாய்சோ ணிதக்கூட
　　சாலத் தோடு
மைந்தசைக்கும் பிபாக மென்பாய பூதிகரம்
　　பாமா பூதி
வெந்துவக்குச் செந்துத்தா னங்கேச மாமள்ளல்
　　விளம்பு மோரேழ்
தொந்தநிர யங்களிவற் றின்பிரிவெண் ணிலவுயிர்கள்
　　சுழலு மாங்கே. 35

எண்சீர் விருத்தம்

மனிதர்பவ மாநாவ லந்தீவிற் குரித்தாய்
　　மன்விருத்தி மேருவதிற் குறைதமசு கீழாம்

துனுநடுவி ராசதமா நிறைசாந்த மேலாய்த்
 துலங்குமதைச் சூழ்தருஞா னதித்த னுங்கே
நினைவுதய கிரிமறதி யத்தகிரி யதனு
 னேரும்விசா ரப்பகலு மவிசார விரவும்
இனுமகந்தை முகில்மறைவுண் டிருக்குக்கி ழெசார்
 [தெற்
 கியல்சாம மேற்குவடக் கதர்வணமெல் லைகளே. 36

அறுசீர் விருத்தம்

சின்மயிஜ வாமுடுக்க ளிச்சையுரு மயற்புந்தி
 களங்கத் திங்கள்
சின்மயவா தித்தனெழும் விசாரணையாம் பகற்கண்
 திகழ்ந்தி டாது [ணே
புன்மையுறு மவிசார விரவினிலங் கிடுமந்தப்
 புந்திச் சோமன்
மன்விளங்க விடந்தந்தே தேயும்வகை கவர்ந்திடுஞ்
 மயவெய் யோனே. [சின் 37

எண்சீர் விருத்தம்

ஆன்மவுணர் விரவியத னல்வளர்வுந் தேய்வும்
 அடையுமுல கறிவுமதி யுலகறிவு மிகலாம்

பான்மையபூ ருவபக்கத் தான்முற்ற நிறையப்
படுஞ்சித்தி பூரணையிவ் வுலகறிவான் மாவின்
மேன்மையுணர் வைச்சேருங் கிருட்டினபக்: கத்தான்
மீளாதெல் லாமொடுங்கு முத்திதனி யமையாம்
சான்மையுல கறிவுநிறை வொடுக்கத்தி லகந்தைச்
சர்ப்பத்தான் மூடல்விடல் சாருதலு முளவே. 38

வெண்பா

இராசதவாங் கார மியம்பிடுசெம் பாம்பு
கராவணைய தாமதவாங் காரம்—இராகுவெனல்
சத்துவமே யாண்மைத் தகவா மிராசதம்பெண்
வைத்தவலி தாமதநீர் மை. 39

சுத்தசாத் தீகமனஞ் சூழ்தருமோர் சக்கரத்தேர்
இத்திலொளிர் சாட்சி யெனுங்கதிரோன்—பத்தோ
டிரண்டவத்தை யாகு மியன்மதிக டோறு
முரண்டவிர்த்து நின்றிலங்கு முன். 40

அவித்தைபிரா வீறறவுண் டாம்விருத்தி ஞானத்
தவத்தருணன் பின்பரபோ தானு—பவச்சுடரோன்
சற்பிரம விண்ணினெழுஞ் சர்வசாட் சித்துவமாம்
எற்சகத்தி ரங்கதிரோ டே. 41

அறுசீர் விருத்தம்

உலகவா சனைமட் டாய வோர்கலை
	சிதையாத் திங்கள்
திலகவைங் கரண ஞானேந் தியங்கரு
	மேந்தி யப்பேர்
மலருமூ வைந்தி திக்கண் வளர்ச்சியுங்
	குறைவு மேவும்
நிலைபிர விர்த்தி யோடு நிவிர்த்தியா
	மிருபக் கத்தே. 42

சாட்சித் துவமே லைத்திசையிற் சனித்த
	விருத்தி ஞானநிலா
மாட்சிப் பரஞா னக்கதிரால் வளர்ந்தஞ்
	ஞான விருளொழிய
ஆட்சித் தனிப்பூ ரணமாகி யனுபூ
	தியெனும் பகுளமதாய்ச்
சூட்சப் படத்தேய்ந் தேபரசிற் சுடரோன்
	றுதல்வீ டெனுமமையே. 43

வெண்பா

அவாவா மவிச்சையிரு ளாற்காணப் பட்ட
தவாமா னுலகுணர்வு தானு—முவாமதியம்

ஏற்றநிரா சைப்பே ரியன்ஞான தித்தனுளம்
தோற்றிற் புலப்படுமோ சொல். 44

தீதிரவு நன்மைத் திவாவுஞ்சிற் சத்தியென
ஓதலுறு நாளே யுரைத்தவதும்—சோதிப்
பிரமமெனுங் காலமே பேறிழப்பு மூடங்
தெரிவுபெரி தற்பமுமீ தே. 45

சுழுத்தியுறு மான்ம சுகவுணர்வு வெய்யோன்
விழிப்புறுநிச் சிந்தை விதுவாம்—செழிப்புள்ளம்
சேய்மனமால் புத்திகுரு சித்தம் புகரகந்தை
எய்சனியாம் விர்த்திநா ளேழு. 46

கட்டளைக் கலித்துறை

பிறப்பிள வேனி லிருப்பு முதிர்வேனில் பின்வளர்வு
குறித்திடு காராம் விகாரங் குளிரே குறைவதுதா
னுறப்படு முன்பனி மாரணம் பின்பனி யோதிருமுக்
கறிப்பின் வகையாம் பருவங்கள் பாவனைக் காலத்த
[வே. 47

அறுசீர் விருத்தம்,

பாவனைப் பியாச தட்சி ணயன பருவ மாய்ந்த
சீவனர் தியான யோக மாம்பிதிர் யானத் தேகும்
ஓவறும் விசாராப் யாச வுத்தரா யணத்தில் வீந்த
தீவிரர் ஞான யோகத் தெய்வயா னத்தாற் செல்வர்.
48

வெண்பா

காமப் பனிகோபக் காற்றுப் பிசுனவெயில்
தாமுற் றிதய சரீரத்தில்—தோமியலா
வண்ணஞ்சாத் தீகமா மாறிலா வெண்போர்வை
திண்ணமாப் போர்த்தல் சிறப்பு. 49

கலி விருத்தம்

அறிவற் றேய்விலா தமைத்திடு கருமச்
செறிவி ராசதச் சிவப்புவா ணாளை
வறிதிற் போக்குமுண் மயறமோ நீல
முறவொ ணாதுயர்ங் தோர்குணத் துகிற்கே. 50

வெண்பா

மாதரவாச் சூறு வளிதான் பரஞான
பூதரமாய் நிற்கும் புனிதர்தமை—யாதுசெயும்
ஊனுடல்மட் டாஞ்சிற் றுயிர்ப்பஞ் சினையுழல்வித்
தீனமுறத் தேய்ப்பதலா தே. 51

கலி விருத்தம்

வெறுப்புக் காலை வெயில்விருப் புப்பனி
ஒறுத்தி டுஞ்சின மூச்சி வெயிலதாம்
குறிப்பு லோபங் கொடுமுட் கவலைதான்
அறுக்குஞ் சூறை யசூயை கனலரோ. 52

வஞ்சி விருத்தம்.

வயிராக்கிய மாலை வெயிற்றான்
மயலர்ப்பிர மான்ம விசாரச்
செயல்வாய்த்துள தென்றன் மனோமெய்
யயலேற்றிடு ஞாலன் வீடே. 53

கலி விருத்தம்

நினைவு சன்ம நிகழ்த்து மறதியே
வனைவி லாத மரண மறிவுதான்
பனியொ ழிந்த பகலறி யாமையோ
இனிமை யற்ற விராவென வோர்கவே. 54

விவேக மிந்திரன் மேன்மதி யேசசி
தவாத மற்றைய சற்குணந் தேவர்கள்
நிவார மோக நிருதர்க் கிறைவன்மற்
றவாவு தீப்பண் பனைத்து மசுரரே. 55

இதய கும்பத் தெழுந்துள சாட்சியர்
மதிய கத்தியன் மாந்து மவித்தைதவா
சிதியுள் வன்மன தென்னும் விருத்திரன்
எதிர நன்மன விந்திரன் மாய்க்குமால். 56

அறுசீர் விருத்தம்

இதயஞா லத்தி னூக்க மிந்திரன்
வெறுப்புச் செந்தீச்
சுதமுறு மறதி காலன் சோம்பலே
நிருதி யன்பு
மதிபெறு வருண னாசை வாயுவா
மமைதி தானே
நிதிபதி யான்ம ஞான நிலைமையீ
சான னன்றே. 57

வெண்பா

அகண்ட விருத்திநிலை யாங்கற் பகந்தான்
மிகும்புதுமைச் சாட்சி விருத்தி—தகுங்காம
தேனு விசாரச் செயலிற் றிகழ்ஞான
மானமுறு சிந்தா மணி. 58

கலிநிலைத்துறை

அசுத்த கற்பனை யிரவினில் வல்லவ ரசுரர்
விசுத்த கற்பனைப் பகற்கணே சமத்தர்கள் விபுதர்
பிசைத்திரண் டையும் விரும்புமா லையில்வலார் பிதிரர்
வசைத்த மூன்றமில் காலைஞா னத்தவர் மனிதர். 59

அறுசீர் விருத்தம்.

பரமுணர்ஞா னியைத்தரிசி யாதவனந் தகன்ஞானப்
பனுவல் கேளா
நரன்வெதிரன் ஞானநிலை விசாரியா தவன்மூஙகை
நணியா சானைப்
புரியுடன்றேடா தவனுந் தேசிகற்குப் பணிவிடைசெய்
பொறியில் லோனும்
அரியசரண் கரமிழந்த முடவர்பர ஞானமிலா
ரலிக ளாமே. 60

கலி விருத்தம்

உடல மாயமர் வோன்மர முத்திபி
னிடம்வி ருப்ப மிலான்மிரு கம்பல
படர்வ குப்பிணிற் பார்ப்ப னிராக்கதன்
தொடர்கு தர்க்க சொரூபி யலகையே. 61

நேம நஞ்ச நெருப்புடன் முட்களும்
பீம வெட்சசு பேயொடு பூதமும்
எமன் கால னெதிர்த்திடு தூதரும்
காமங் கோபங் கழுது மூலோபமே. 62

எழுசீர் விருத்தம்

நினைவு மர்க்கட மாமு லோப
　　நெடுஞ் சுவான மிராகமோ
முனைச ருப்ப மகந்தை சிங்க
　　முளைத்த வஞ்சனை யெண்குவே
சினம டும்புலி மதமி யானை
　　தெறும் பொறாமை விருச்சிகம்
அனல மோகமோர் பூத மாகு
　　மவித்தை தீய பசாசமே. 63

வெண்பா.

தன்னிடத்து நின்று சகத்தெனும்நா லைத்தந்து
பின்னியத னுள்ளாய்ப் பிறங்குபர—மென்னும்
சிலந்திபினு மந்தச் செகத்தெனுநா லைத்தான்
கலந்துணும்வே றின்றியே காண். 64

அறுசீர் விருத்தம்

இரவாம் வியவ காரமுணர்ந் திட்டே
　　பகலாம் பரமார்த்தம்
தெரியாக் கூகைத் திரள்பெத்தர் திகழுவ்
　　விரண்டு மறிந்துமயல்

தரியாச் சகச நிட்டர்கண்மார்ச் சாலம்
　　வியவ காரவிராத்
திரியோர் வொழிந்த காகமவை செறிநிர்
　　விகற்ப ஞானியரே. 65

சடநீ ரொழியச் சித்தமுதந் தனையுண்
　　ணுஞ்சா தகரன்னம்
படருந் துரிய நிலவருந்திப் பயில்சாத்
　　தியராஞ் சகோரங்கள்
விடலாச் சவிகற் பத்தொடுநிர் விகற்ப
　　நிட்டை யாமிருகண்
தடவும் விருத்தி யோர்மணிகொள் சகச
　　ஞானி வாயசமே. 66

வெண்பா.

ஈசன் குறிப்பே யிசைக்குஞ் சுருதிகளே
பேசுங் கிளிகள் பெரியோர்தம்—வாசகமா
மன்மிருதி நாகணவாய் மற்றபுரா ணங்குயில்கள்
நன்முகில்போ தம்மனமஞ் ஞை. 67

அறுசீர் விருத்தம்,

விருத்தியி னினையுமனம் வளைவுகளாற் சரிக்குமரா
　　மேலா யுற்றே

உரத்தினினை வாஞ்சாட்சி விர்த்திபறந் தேவெண்மை
யுடன்சி வப்பா
யிருக்குமுவ ணஞ்சிவன் பசுஞான தேசிகனே
யெதிர்சார்த் தாலம்
நரிப்பினகங் கரம்யானை பரவகந்தை யரிசொருப
ஞானஞ் சிம்புள். 68

வெண்பா.

அசுத்தஞ்சங் கற்ப மசங்கற்பஞ் சுத்தம்
விசிக்கங்கு லஞ்ஞானம் வித்தை— மிசைச்சோதி
சற்குணவத் துக்க டமைச்சிதைக்கு மிச்சையெலி
இற்புலிவை ராக்கியமன் றே. 69

அறுசீர் விருத்தம்.

முட்டில் பரமாங் குருக்குளவி முமூட்சுப்
புழுவை யுபதேசக்
கொட்டி னுண்ணேக் கெனுங்குடம்பை குறுக
வைப்ப வாங்கதனுட்
பட்டக் குருவை மறவாத பண்பாற்
பரமாங் குளவியதா
யிட்டுண் முகக்கூ டகன்றெயெய் திடும்பூ
ரணமாம் பறந்தலையே. 70

கலி விருத்தம்

கேணி யிற்றுளி கிளைமரத் தணிலாற்
பேணி றுத்திடல் பிரமமா மிறையால்
மாண வப்பசு மன்னிய போதம்
பேண முத்திதான் பெற்றிடு மாறே. 71

கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆன்மாப்பச் சோந்திக் கதின்மாயா சத்திநிறம்
மேன்மேற்பல் வண்ணம் விளங்கிடினு மென்குறை
[யே. 72

கலித்துறை

பலகோடி யண்டக் கருக்கொளேம் பூதநுணல்
[பஞ்சவிடயத்
தொகைபாட வதனையிங் திரியவைங் தலையர வொருங்
[குண்டுமேற்
றலையாடல் கண்டுமன வவணமது கொண்டுயர் தரச்
[சூனிய
வலையூடு பட்டதது முணர்வேட னுள்ளாய் வழக்கற்ற
[தே. 73

கட்டளைக் கலித்துறை

சிகண்ட மயிலனை யார்போய் சடங்துயர்ச் சிற்றின்ப
[மாம்

நகண்ட சிலமின் மினியவித் தைத்தம நண்ணுமல்
[லால்
அகண்ட பரிபூ ரணசச்சி தானந்த வான்மவத்தாய்
உகண்ட சிவாதித்தன் முன்விளங் காமென் றுணர்ந்
[திடவே. 74

வெண்பா

அப்புறமன் னுற்சுவர்வைத் தாங்குப் பினுமதனைச்
செப்பமுறத் தீற்றுந் திறமதுதான்—இப்புவிமெய்
யாதியெலாம் புத்திநினை வாற்றோன் றப் பின்னுமதன்
மீதிலுறல் புத்திநினை வே. 75

நிலம்பிரமஞ் சிற்சத்தி நீர்தருக்கள் சீவர்
இலங்கியிடுந் தோப்பாவ தீசன்—துலங்கும்
சிதாகாயத் தில்விருத்தி சேர்ந்து நிலைத்தல்
சுதாவான் கமனத் துவம். 76

மண்கல் லயங்கனகம் வான்சுவர்கா னற்கிளிஞ்சில்
திண்பழுதை வந்திமுயல் சித்துருவே—எண்சகமோ
பானை பிரதிமைவாள் பைம்பூண்மை சித்திரநீர்
கூனவெள்ளி பாம்புசுதன் கொம்பு. 77

பிரமநிலத் துற்ற பெருமாயை யத்தி
மரமதனிற் சீவ மசகத்—திரள்செறியு
மண்டக் கனிக ளளவற் றுளவவற்றை
உண்டற் குரியனிறை யோர். 78

வஞ்சி விருத்தம்

விரையவித்தை வேர்மனம்—மரமுடம்பு வார்கிளைத்
திரள்சகந் தெருட்சித்தீ—வருவிராகம் வாளரோ. 79

வெண்பா

ஆன்மநிலத் தின்வித் தவிசாரம் வாசனைவேர்
ஊன்மெய் பராரை யுலகுகிளை—பான்மை
நினைவிலைக ளூற்றுதிர நிற்குமனந் தாருத்
தனையுணர்தல் வேர்ப்புழுவே தான். 80

அறுசீர் விருத்தம்.

தாவரநீர் வாழ்பவையூர் வனபறவை விலங்குநரர்
தணிப்புத் தேளிர்
மாவிடயம் பொறிபுலன்பூ தம்புவனஞ் சித்தமக
மதிசீ வப்பேர்
மேவுதருத் திரண்மாயைக் காடெறிந்து சிற்கனலான்
வெளிசெய் வான்மெய்க்
காவலவன் மனத்தறியை விவேகவுரக் கோடரிக்குக்
காம்பாக் கொண்டே. 81

கலி விருத்தம்.

அசத்தி யஞ்சட மல்லன்மெய்க் குற்றியின்
மிசைத்த வான்ம விசாரக் கடைதல்செய்
நிசச்சி தானந்த நீள்கன லோங்கிடும்
பசைச்சு வானு பவவிளக் கத்தொடே. 82

வெண்பா.

நனவாங் கிளைகனவாம் நாப்பண் சுழுத்தித்
தனிமூலங் கொண்மாயைத் தாரு—மனதுள்
விரியும் விசாரமெனும் வேர்ப்புழுவாற் பட்டால்
துரிய வனலெரிக்குஞ் சூழ்ந்து. 83

அறுசீர் விருத்தம்.

அதிகார மனநன்செய் விசாரணையா முழவுசெயற்
காம்வி வேகம்
திதிநீர்சா தகயூக மெருநிறைசான் றகமென்னுந்
திடநன் னூறு
பதிவாமவ் விவேகமிக வீர்பாய்ச்சல் சற்சங்கம்
பரமாங் காவல்
விதிர்வாய சங்கைதெறல் களைகட்டல் பரஞானம்
விளைவு தானே. 84

வெண்பா.

சீவனே சாலி செறியு மவித்தையுமி
தாவுசங் கற்பந் தவிடாகும்—ஓவில்
விசாரஞ் சமாதியினான் மேயவவை போக்கின்
உசாவி லரிசிசிவ மோர். 85

கலித்தாழிசை

உடலுமிவே றானா லுயிர்நெற்கஞ் ஞான
அடன்முளையின் றான்மா வரிசி யகந்தவிடே. 86

அறுசீர் விருத்தம்.

மனிதசன னக்கினைற்றி னுணர்வாய நன்னீரை
மனதா வாக்குத்
தனுவெனுமுத் தலையிட்டே நல்லுயிர்வேள் முத்தி
தனமாஞ் செந்நெற் [யின்சா
கனகழனிக் கிறைத்துப்பே ரானந்தப் பயன்பெறு
காணு தந்தோ [தல்
தின்முயல்வார் பலர்பந்த சாதனமா கியவிழற்புற்
செறிகாட் டிற்கே. 87

வீறிதய நிலத்தின்மண் ணறியாமை யையங்கள்
விபரீ தம்வன்
பாறைசிர வணமனன நிதித்தியவற் றினைமுறையே
பற்ற றுக்குந்

தேறுபடை யிவற்றின்முய லப்யாச மாந்தொடலாற்
விகழ்மெய்ஞ் ஞானம்
ஊறிநிறை நன்னீர்சத் துவவிருத்தி யதின்மூழ்கி
யுண்டு வப்போன். 88

வெண்பா

மனித பவக்கழனி வாய்ந்தவதி காரி
தனுவா முதிர்கரும்பு சார்ந்த—கனநேதிப்
புத்தி யியந்திரத்தாற் போதவிர சம்பிரிந்திம்
முத்திக் கடாரமல்கன் முன். 89

இக்கு மனதுகொழூந் தென்ன றமோகுணமாம்
சக்கை யிராசதமே சாத்தீகம்—தொக்கரசம்
விர்த்திஞா னம்பாகு மெய்ஞ்ஞானம் வெல்லமலாற்
சர்க்கரையான் மாவெனவுஞ் சாற்று. 90

ஆன்மாக் குலால னவன்சத்தை யாமிருத்தில்
தான்மேவு சிற்பாவ சக்கரத்தால்—மேன்மேற்காண்
பூன்றசுக பாண்டம் பொலியுந் துரியமென
ஏன்றகனற் சூளையிசைந் தே. 91

எண்சீர் விருத்தம்

பிரவிருத்திக் கெதிரின்முமூட் சுத்துவமாம் பசுவைப்
பெற்றிந்தப் பவபாண்டத் தீசுரஞா னமதாம்
அரிசியிற்சற் குணப்பால்பெய் துறுமுயற்சி நன்னூ
லறிவுகுரு கருணையெனு மடுப்பின்மன னத்தீச்
சிரவணக்காற் றூற்பெருக்கி நிதித்தியெனும் பாகஞ்
செய்துதிக மும்பிரம ஞானவமு தத்தைப்
புருடனனி சமாதியெனு மருந்தல்செயிற் பந்தப்
புண்கணற முத்தியெனு நித்தியசிற் சுகத்
[தோன். 92

அறுசீர் விருத்தம்

ஆற்றலிறைக் கருமான்மெய்த் துருத்தியின்முன்
லாற்பி ராணக்
[விணையூத
காற்றிலுயிர்த் தழல்கரண விந்தியமாங் கரியுமியாற்
கனல வாங்கே
சாற்றுவிட யக்கருந்தா திட்டனுபோ கக்காய்விற்
சான்றூங் கூட
தேற்றகுணக் கருவிகளான் ஞானநடச் செயல்கள்
திலங்கு மன்றே.
[புரிக் 93

கட்டளைக் கலித்துறை

நிபக்குரு வாகுந் தபதி யதீத நிலைத்தருவை
உபக்கிர மோபசங் காரநல் யுத்தி யுயர்வினையாற்
சுபத்துரி யானு பவமனை காணச் சுகிக்குமவண்
தபத்தொளி ரான்ம புருடனும் விர்த்தித் தலைவியு
[மே. 94

வெண்பா

ஈரே ழுலகவடுக் கேய்ந்தவண்ட மாளிகையுட்
சாரோர் புவியடுக்கிற் றன்னுடலா —மேரார்
அறையுட் சிவோகநினை வாசனத்திற் சான்றாம்
இறைசிற் சுகசொருப மே. 95

எழுசீர் விருத்தம்

பவங்களா மூரூர் தொறுமிறப் பென்னும்
பயணமாய்ப் பலதுவா ரங்கள்
இவர்ந்தமெய்க் குடிலிற் பசுத்துவத் துச்சி
லிசைந்ததை யெனதென வெண்ணிக்
கவன்றுமா முத்தி நகருறு ஞான
காயமாஞ் சொந்தநன் மனையை
உவந்துநிற் பதுவா மனுபவ வாச
மொழிந்திட மறந்துள துயிரே. 96

அறுசீர் விருத்தம்

முத்திமா நகர்க்க ணந்த முறையினப்
யாச மார்க்க
பத்ததி யுளவோர் மார்க்கம் பற்றியந்
நகரின் மேவி
யொத்திருக் கின்றோர் தம்மு ளொருவனு
மோரா சான்காண்
பித்தவந் நெறிமீ ளாது பிடித்தேகந்
நகர்போ மட்டே. 97

மட்டினை யறமம் முத்தி மாநகர்ப்
பேரின் பந்தேக்
கிட்டவர் விடயக் கூழுண் கீழ்நமை
யழைப்பான் காணப்
பட்டுளா ரருளா லீங்கும் பரமசிற்
சுகக்க ளிப்பின்
நிட்டையர் சமசாந் தத்தர் நிதிபெண்ணின் 98
மயங்கார் காணே.

துரியா தீதம் பஞ்சியதே துரியக்
　　கந்து சத்துக்கான்
குருவா நெடுமை நால்சித்துக் குறுக்கு
　　நாலா மானந்தம்
சரியாம் பின்ன லபிணியெனுஞ் சத்தி
　　யாடை பஞ்சதன்மாத்
திரையாம் பின்னை யெனுமாயை திகழைக்
　　கிறச்சித் திரப்பொய்யே. 99

வெண்பா

அறிவுருவி னன்மாவே யாம்வெண் பருத்தி
மறவியெனும் பஞ்சாகி மற்று—முறகிணைவாங்
கந்திவாய்த் தூல சகத்தா டையுமாகி
வந்தும்வே றுண்டோ மதி. 100

அறுசீர் விருத்தம்,

காமதநெய்ச் சிக்கொடிரா சதமாசார் மனத்துகிலைச்
　　சற்கன் மங்க
ளாமுவர்சேர்த் துபாசனைவெள் ளாவிபிடித் தான்ம
　　ராப்பி யாசத் [விசா.

தூமணிநீ ரிடையழுக்கி யுக்தியெனும் பலகைதனிற்
றேய்த்தல் செய்யிற்
பூமலிசத் துவவெண்மை யாமிதனா லானந்தப்
புனிதங் காணே. 101

கலி விருத்தம்

நடுநிலைச் சத்துவ ஞானக் குஞ்சிகைத்
தடரிரா சததமோ வறிவுக் கேசமற்
றிடவெறி கத்திகூ ரியவி வேகநோக்
கொடிவறு சௌளமா முயரப் யாசமே. 102

வெண்பா

சுருதிகுரு வாக்குச் சுவா னுபவஞ் சுக்குக்
கருமிளகு திப்பிலியாச் சாற்றுங் — திரிகடுகம்
சாத்திகமி ராசதமே தாமதம்வா தம்பித்தம்
சேத்துமமாம் விர்த்தியுட றேர். 103

கலிநிலைத்துறை

பந்தத் துவமா மக்கினி மந்தம் படுசீவர்
வந்திப் புறுநிட் காமிய கன்ம மருந்துண்டால்
சந்திப் பரியமு மூட்சுத் துவப்பசி தான்மேவி
நந்தற் பரஞா னத்தமு துண்டுற நலன்வீடே. 104

அறுசீர் விருத்தம்

பந்த நிவிர்த்தி விழையுமுயிர் படர்நோ
 யொழிவின் விருப்புற்ற
முந்து பிணியா ளன்சீவன் முத்த
 குருவே வியாதியிலா
விந்தை மருத்து வன்ஞான விளக்கந்
 தக்க வவுடதந்தான்
சிந்தை விராகம் பத்தியமாந் திகழு
 முத்தி சுகநிலையே. 105

இச்சகஞ் சீவ னீச னென்றமு
 வகைய வுப்பை
மெச்சுசத் துவவி ருத்தி வியன்சய
 நீரி லிட்டே
விச்சைநா லெருவி னுண்மை விசாரவக்
 கினிப்பு டத்தால்
சச்சிதா னந்த போதத் தகையமுப்
 பூச்சுண் ணங்காண். 106

கட்டளைக் கலிப்பா

சச்சி தானந்த ஞானமுப் பூச்சுண்ணந்
 தன்னிற் காலகு தந்தேய கந்தகம்

நச்சு வத்துப்பா டாணங்க ளீற்றிட
நண்ணு நித்திய பூன்றசர் வான்மக
விச்சைப் பற்பங் களையவை யாமென
மேவு முண்ணல்செய் சீவ னணித்தியப்
பிச்சு மேகநோய் கண்டத் தொழுப்பிணி
பேத மாஞ்சுரந் தீர்ந்து பிரமமே. 107

கலி நிலைத்துறை

விடய நீரினிற் கசிந்திடா விதமன வப்போ
டடர்வி விசாரநற் பச்சிலைச் சாறுகொஞ் சகலின்
இடையு றச்சமா திப்புடத் திருத்திடிற் றூரிய
வடிவக் கட்டதாந் தத்துவச் சரக்கெல்லாம் வசமே. 108

வெண்பா

காதற் கனலிற் கலங்கா வகைவிருத்திச்
சூதத் தினைநற் றூரியான்ம—போதச்
சயநீராற் கட்டியிடிற் சத்தாகி பஞ்ச
மயமேலாக முஞ்சிவமே மம். 109

உயிர்ப்பித் தனைமனச்செம் போடுமதிக் கஞ்சம்
கயிர்ச்சிந்தை வங்கமகங் கார—அயத்திரளும்
ஆன்ம விசாரவுணர் வாம்பரிச வேதியினல்
மேன்மைச் சிவசுவண மே. 110

ஆன்ம விசாரநிரோ தாப்பியா சங்கமென னும்
வான்மந் திரமருந்தின் வல்லோர்க்கே—மான்மனமாம்
நாகமிசை மன்விருத்தி ஞானமெனு மாமணிகைக்
காகுமவித் தைதக்கமம்நீப் பான். 111

அறுசீர் விருத்தம்.

அவித்தைநிலத் துளகன்மச் செல்லெழுப்பு நவவாயி
லாக்கைப் புற்றில்
தவிக்கமுறை யேவலிதாஞ் சங்கற்ப நிச்சயஞ்சிந்
தனையி னேடு
விவத்தையபி மானப்பற் களின்வேட்கை விடஞ்
வீக வுச்சி [சாத்தி
நவத்தலத்தி னன்ஞான மாணிக்கங் கொளுங்கரண
நாகப் பாம்பே 112

கலித்துறை

எண்ணில் வாசனைச் சிதல்களா லமைந்தவைக் கிடமா
யொண்ணு சிந்தையாம் புற்றதின் மனப்பணி யுள்
ளாய்
நண்ணி யேவெளி திரிவதாங் கட்செவி நசைநஞ்
சண்ணு மாத்தும விசாரமந் திரத்தமை யடக்கே 113

வெண்பா

பைமறித்துண் ணோக்கல் பலகாற் குணதோடச்
செய்கைவிசா ரித்த றிடஞான—வைபவத்தின்
மார்க்கமுற லென்னு மணிமந் திரமருந்தாற்
றீர்க்குவர்பெண் மால்விடத்தைத் தேர். 114

கொச்சகக் கலிப்பா

ஆய்ந்த சடஞ்சிந்தை யஞ்ஞான ஞானமதும்
ஓய்ந்த கரிகம்பி யுப்போடு கந்தகந் தீத்
தோய்ந்த துரியந் துரியாதீ தச்சுகமுங்
காய்ந்த வயத்திரளுங் கர்ப்பூர தீபமுமே. 115

கலி வெண்பா

அஞ்சனமை வல்லா னருள்பெற் றிருநிதியம்
வஞ்சமறக் கண்டு வருங்குறளுக்—கஞ்சா
இகலாற் றகர்ப்பலியீந் தீடறக்கைக் கொண்டு
மகிழ்வார் பெருஞ்செல்வ மல்கல்—சகமீ
தனுபூதி ஞானி யருள்பெற்றே ஞான
தனுநோக்கி மாயைத் தடையின்—மனமாழ்கா
தேற்றபசு போத மிறப்பித்து ஞானசுகத்
தேற்ற முறுவார் செயல். 116

கலி விருத்தம்

தேக மான சிலைதனைப் புந்தியென்
றாகு நல்லுளி யாற்பொளிந் தாங்குநான்
ஏக வான்மா வெனுந்தியா னத்திறற்
சேகி லான்மநிட் சேப மடையலாம். 117

அறுசீர் விருத்தம்.

இதயமனைக் குண்ஞான திரவியத்தை மனவுளவ
னிசைந்து நிற்கும்
உதவியினு லிந்திரியக் கள்வர்கவர்ந் தேவிடய
வுறுவ னத்தில்
நிதமுலவி நவவாயிற் காயபுரி மறைந்துறையு
நிகழ்ச்சி யின்றாம்
மதியின்விசா ரப்யாச நயச்செயலான் மனவுளவன்
வசமாங் காலே. 118

வெண்பா

தன்னையறி யாமை தனிக்கொலைமெய் யாமென்னல்
மன்னுகள வுன்னன் மதுபானம்—என்னதனல்
காமம் பிறிதுள தாக் காணல் சினமிவைகள்
தாமைந்து மாபா தகம் 119

கட்டளைக் கலித்துறை

ஓசை பரிச வருச்சுவை கந்த வுறுப்புகளின்
விசுசங் கற்பப் பணிகள் புனைந்தவிட் சேபமெனப்
பேசு கணிகை வசப்பட் டுயிர்மைந்தர் பேருணர்வாந்
தேசுப சாந்திப் பொருண்முற் றொழிந்துந் தெரிந்
[திலரே. 120

எழுசீர் விருத்தம்

அகங்கரச் சிரமீ துடலெனும் பாரம்
அலைமன மிடற்றவாச் சுமையும்
முகந்திடு சிந்தை யிடையின்வா சனையாம்
மூட்டையும் வீக்கியே புந்தித்
தொகுங்கரம் விடயப் புன்புசிப் பேந்தித்
துளங்குதொல் லவித்தைவன் மிடியோர்
தகுங்குரு வள்ளல் சரண்புகி லவைபோய்ச்
சாற்றொரு ஞானசம் பன்னர். 121

பன்னிருசீர் விருத்தம்.

இசைதுற் குணங்களைக் கோபித்து நற்குணத்
திச்சையுறு வார்தனதறத்
தினைமற் றுளார்பணிந் தேற்றிடற் கிசையாத
வியல்பா முலோபமுடனே

நிசமா தவர்க்கேவல் செய்தவர்த நற்புண்
ணியங்கைக் கொளுங்களவினார்
நிகழுமன் னியர்துகண் மறப்பர்பிர விர்த்தி
நெறியில்வல் லவரிவரியான் [வினை
ஒசிவன் கொலோநிவிர்த் தித்தொழிலி லென்றுமிக
வுற்றுப் பொருமைபவமாய்
வுன்னித் தளர்ந்துபா வச்செயற் கஞ்சியே
யுளமாயை நோயில்வாடி
மிசையா மவித்தைதமிடி யான்மிக வருந்தியிம்
மேதினியில் யானுய்வதெவ்
விதமோ வெனப்பதைப் புறுமுத்தி காமியே
மெய்க்குரு சரண் பெறுவனே 122

எண்சீர் விருத்தம்

இறையருள்சேர் சாதகன்கா யத்தை நிந்தித்
திவ்வுடல்யா னெனுமதியை மாய்த்துத் தேகம்
அறைசகமின் றெனவொன்மா வாமா ருடன்
அனைத்தினுக்கு மேலோன்யா னெனவே யாவும்
நெறியினென ஞானமது பானத் தோகை
நிறைந்துசமா தியிற்றுயின்று பொறிபு லன்கள்
அறிவகல மூகவனு போக மாயிவ்
வனுபவமு மிறந்திடுவ தசித மன்றே 123

வெண்பா.

அசடன்போல் லாதபர மாங்காரி யாவும்
பசையின்றிக் கெட்டவன்சு பாவி—வசையறியாப்
பித்தன் மதியில் பிராணியம காதகன்மா
சத்துருவே கேவலன்முத் தன் 124

கலி விருத்தம்.

குணமிலி குலமிலி குருட ளுசியூ
அணர்விலி நபுஞ்சக னாமை மெய்யிலி
துணையிலி வறியவன் சோம்பன் கைகழு
விணையிலி செவிடனென் றிவற்ப ழிச்சுமே 125

கலிநிலைத்துறை.

ஐந்த டக்கிகா லாயுதஞ் சலமக லாத
செந்து வேட்டுவ னடைந்தவ ருயிர்பொரு டேகம்
பந்து விற்கவர் வோனென வையனைப் பழிச்சல்
முந்த வீசனுட் டுக்குற வன்னென மொழிவாம். 126

வெண்பா.

சுத்தசங் கற்பத் தொழில்கா லரைமுக்கால்
மெத்தமுழுப் பங்கும் விடுஞ்சாங்கி—வித்தையெனும்
தூமச்சோம் பினர்பிரம வித்து வரன்வரியான்
அச்சோ வெனவரிட்ட னும். 127

அறுசீர் விருத்தம்

துரிதசிதா பாசமெனுந் துணைவன்பா லவாவின்றிச்
சுயஞ்சித் தாய
பரபுருடன் றனைத்தனிமை யிற்கலந்து மந்நினைவே
பயின்று பின்னும்
மருவுபிரா ரத்தமெனுந் தொழில்யாக்கை மனையிற்
மனப் பெண் ணேயிச் [செய்
சிரமெனுந்தா யூழுணவூட் டிடப்புசித்தோர் வறு
தூக்கச் சேயாம். [தூங்காத்
128

வெண்பா

புலைமா மிசப்பாவை பூணவத்து வார
மலமூத் திரபாண்டம் வன்சுக்—கில்வூற்று
நாடிக் கயிற்றிருக்கு நாறான் பொதியெனுப்புக்
கூடுதிரத் தோற்புரையான் கொல். 129

நாலாட் சுமையே நரிக்குப் பொதிசோறு
மேலோயாக் காற்றின் விசைத்துருத்தி—தோலாய்
நரப்புக் கயிற்று ணடிக்குமலப் பாவை
விரிப்பிற் புழுக்குடிலிம் மெய் 130

கலி விருத்தம்

சரீர மேசிறைச் சாலை யதனிடை
விராவு நெஞ்ச மிடற்றுட னைம்பொறிப்
பராவு சென்னி படரகங் காரமே
அராவெ னப்படு மாசை விலங்கரோ 131

பிரவி ருத்திப் பிரிய முளார்மனம்
கரும நீரிற் கலக்க விலவணம்
அருநி விர்த்தி யவாவினர் நெஞ்சகந்
துரிய ஞான சுசிக்குச் சசியகோ. 132

வெண்பா.

மீதுறுமஞ் ஞான வினைச்சூத் திரத்துவமற்
றேதிகழ்சற் சிற்சுகம்யா மென்னுமுப—வீதமொடு
நின்றான்ம ஞானத்தீ நேர்துவிச ரேபிரமத்
தொன்றும் பிராமணரா வோர். 133

எண்சீர் விருத்தம்.

பருவநன்மா ணாக்கனெனு மிலக்க ணஞ்சார்
பசுவைபுப தேசமெனும் யூபஞ் சேர்த்துச்
சிரவணஞ்செய் வித்தலெனு மைவாய்ப் பந்தஞ்
செய்துடல்யா னெனுமதியா முயிரை யோட்டி

விரவுறாசத் துவச்சித்த வபைபை மேலாம்
விவேகவலி சொரியான்மாக் கினியி லிட்டே
பரமெனுமெக் கியபுருட னேற்க மோட்சப்
பதிபுகுத்தும் ஞானகுருப் பார்ப்பான் மன்னே. [134

அறுசீர் விருத்தம்.

புறக்கருமப் பஞ்சமர்சற் கருமச்சூத் திரர்பத்திப்
பொருவில் செல்வச்
சிறப்புறும்வை சியர்யோக சத்திரியர் பரஞானத்
தீவ ளர்ப்போர்
உறப்பாத கண்டமெனு மிராசதா னியிற்சமிராட்
டொருவ ரானும்
பெறற்கரிய வனுதிபர ஞானயோ கீச்சுரனே
பிரமந் தெய்வம். 135

ஆசிரியப்பா.

இயம்புதன் மகிமை யெனும்பெருந் தேயம்
வயங்கிய முத்தி மாநக ரதனில்
ஆன்ம பூபதி தான்சத் துவமன
நன்மந் திரியொடு தொன்மறை நெறிவல்
லரண்மனைக் கண்ணே பரவுணர் வாசனம்

வீற்றிருந் தருளத் தேற்றிய நற்குணச்
சேனைகள் சூழச் செறிஞா னேந்தியம்
ஆன வுயர்தொழி லாளர்கள் கரும
இந்திய மென்ன வியல்புற வினைஞர்
தந்தந் நெறியிற் றாழ்வற முயலத்
துற்குண மாய துட்டரு மவித்தைப்
பகையுமற் றொழியப் பத்திசற் கன்மந்
தியான யோகந் தெரிதவ ஞான
அதிகா ரத்தவ ரவ்வவ நெறிசெலப்
பங்கமி றன்மயப் பார்வைச்
செங்கோ னடாத்தித் திகழுநித் தியமே 136

எழுசீர் விருத்தம்

சத்திய மதிலே பொறுமையே யகழாஞ்
சத்துவ குணம்பதா திகளே
மெய்த்தவம் படைசற் பாத்திரத் தீதல்
மேவிய கோட்டையு முறப்பும்
பத்திமந் திரியின் சொற்களே கவசம்
பரிந்தநல் லொழுக்கமே யிரதம்
ஒத்திவை கோபங் காமமா தியமாய்த்
தொன்றுணர் முத்தியா சனத்தே 137

அறுசீர் விருத்தம்.

புளகோல் லாச மெனுங்கவசம் புனைந்தா
னந்த பாட்பமெனும்
வளமுத் தாரம் பூண்டுபிர மானு
பூதி முடிசூடி
அளவில் சுகசிங் காதனத்தி னமர்ந்தே
முத்தி காந்தைதனைத்
திளையா நின்ற ஞானியராந் தீர
நிருபர்க் கிணையவரே. 138

வெண்பா.

அசுத்தமனத் தீயமைச்சா லான்மாவா நல்வேந்
திசைத்தவுயிர்த் தீவேந்தா மீங்கே—விசுத்தமன
நல்லமைச்சாற் சிவ நவைவேந்து மான்மாவாச்
சொல்லியநல் வேந்தாந் துணி. 139

அறுசீர் விருத்தம்.

தீயவியல் வாசனைச்சத் துருமறையா தேவெளியாத்
தென்ப டுங்கால்
ஆயிடையக் கணமேமயீ திக்குணமன் றேறெவனச்சுட்
டதுநின் வீரம்

ஓயுமித னாலங்கப் பகைவலியின் னின்னைநனி
யுணர்த லாய
தூயநல்வா சனைப்படையான் மாய்த்திடுபல் காலு
சூழ்ச்சி யிதே. [முயர் 140

வெண்பா

விந்தைச் சிவசொருப மேவாது மேவியுயிர்
பந்தம் விடாதுவிடு பண்புவன—மைந்தன்
இராசசுத னாகி யிசைவேடத் தன்மை
விராவா தொழித்த விதம். 141

கட்டளைக் கலித்துறை

ஈசுர பத்திப்பொன் னான்முத்தி யிட்ட மெழிற்குரு [வின்
நேசநல் லான் கொண்டு ஞான முதநா னெறியின்
வாச மெனும்பூ வளத்தால் விவேக மகாவிளைவு [விசு
மாசறப் பெற்றுண் மகிழ்பவர் மூவகை வைசியரே. 142

சிவ பரசிவ் சாக்கிரஞ் சொப்பனந் திண்சுழுத்தி
ஆவ வவத்தையோன் பானுங் கடந்த வவத்தையதாப்
பாவு சிவதுரி யத்தின் விளங்கும் பரப்பிரமம்
தாவி லொளிசெய்யத் தாவது மாற்றாத் தனித்தங்க [மே. 143

தரளந் துகிர்புட்ப ராகமுங் கோமே தகநீலநன்
மரகதம் வைடூ ரியஞ்சுடர் மாணிக்க மன்வயிரம்
சிரவணந் தாசியங் கீர்த்தனை யர்ச்சனை சேவையுடன்
நிரல்வந் தனையெண்ணந் தோழமை யான்ம நிவேத
[னமே 144

எண்சீர் விருத்தம்.

பிரமவிசா ரஞ்சவண மதனப்பி யாசம்
பெட்படிமைப் பண்பாகு மதுசற்சிற் சுகமாம்
உருவெனநிச் சயித்திடுதல் கீர்த்தனைசங் கற்பம்
ஒருங்குமதிற் சேர்த்தலருச் சனையதனை யறிதல்
வரமருவு சேவையதில் விர்த்திதனை யொடுக்கல்
வந்தனையா மதனையனு பவித்தலதன் னெண்ணம்
குருவதுநா னதுவென் றுணர்வதுதோ ழமையாம்
கூடத்த ரதுவாய்ப்போங் குறியான்மாற்
[பணமே. 145

கலி விருத்தம்

சாந்த நீர்மை தணித்த விரசிதம்
காந்தி ஞானங் கனக முபரதி
வாய்ந்த நன்னூர் மடிவயி ராக்கியம்
எய்ந்த பட்டுடை யென்ன வறிகவே. 149

வேத மாமணி னைக்கண் விரும்பிய
தேது முண்டெச மானவ னீசன்
வாதமில்விசு வாச மெனும் பொருள்
ஈதல் செய்பவர் யாவையு மெய்தவர். 147

வஞ்சி விருத்தம்

பிரமானு பவத்தொளி பெற்றோர்
திரஞான தியான வியோகர்
பரமாகிய பக்தர்த மேவல்
சிரசானனி செய்பவர் நல்லோர் 148

மங்களகர மன்னு சிவத்திற்
பங்கமதறு பற்றினர் சைவர்
எங்கனுநிகழ் விட்டுணு வின்கண்
தங்குறுபவர் வைணவர் தாமே. 149

கலி விருத்தம்

சுத்த சைவர் துரிய சொரூபம்யாம்
முத்த னுக்களு மன்றெனு முத்தரே
அத்தி யூனுரி யாகு முடம்பினை
நத்தி யானென நண்ணிற் புலையரே. 150

அறுசீர் விருத்தம்

சிற்குண விபுதர் சார்பாய்ச் சிறந்தனு
ஒப்பி யாச
வற்பினர் பசுக்கள் யோக மார்க்கர்கா
ரான்கள் பத்தர்
பொற்புடை யசங்கள் பந்தம் போக்கியே
விதேக முத்தி
பிற்பெறு சகச ஞானப் பெருமையா
ரியர்கோ பாலர். 151

வஞ்சி விருத்தம்.

உடலை யானென னானுனல்— நடைய ருமன நானென
[னல்
படியி லாசவ பானமிங்—கெடுமை யோருயிர் நீசரே.
152

கட்டளைக் கலித்துறை

யானென தன்பவை யாவையு மீசனுக் கீதலறம்
ஆன கிரிசியத் தைப்பொரு ளாவறி யாமைபொருள்
ஈனுல கத்தின்ப துன்பமு நீங்குவ தின்பமிலை
மேனி லனைத்தும்விட் டேனென னும்விடல் வீடது
வே. 153

அறுசீர் விருத்தம்.

சான்றாய் நிற்போன் பிரம சாரி
யகண்ட விர்த்தி
என்றான் கிரகத் தன்கா ணியனிர்
விகற்ப நிட்டை
ஆன்றோன் வானப் பிரத்த னரிய
சகச நிட்டா
வான்றான் சந்நி யாசி மன்னு
மதீதம் வீடே. 154

எழுசீர் விருத்தம்

தனுவையா னெனும்பெண் போகமற் றவற்றைத்
தனதெனு மன்னிய போக
நினைவொழித் தெதிர்தோற் றங்களா மனைக
ணின்றுதன் னுணர்வெனும் பயிக்கம்
இனிதுகொண் டுளவா பிரமமா ராய்த
லெனுங்குரு பரன்பணி யியற்றித்
தினமுமான் மாவை யேயனு சந்தித்
திடுதல்வே தாத்யய னந்தான். 155

வெண்பா.

வித்தை நிதியகண்ட விர்த்திமனை யாள்சீவன்
முத்திவீ டாகும் முதுதுரியம்—புத்திராம்
சாத்திகப் பண்பு தழுவுமுற விவ்வண்ணம்
வாய்த்தோனே யில்வாழ்ப வன். 156

அறிவுமகள் சூக்குமமே யாதல் வளர்வாம்
உறுபிரம வான்ம வுணர்ச்சி—செறிதனங்கள்
பூன்ற சுவானுபவம் புட்பித் திடுநிதம்பம்!
வான்றிகழு மான்மா மகன். 157

எண்சீர் விருத்தம்,

சீவர்மட வார்கர்த்தா போக்தா நா னெனல்கால்
செறியான்ம ஞானமதி பகமனது மருங்குல்
பூவுறக்கங் குதஞ்சோம்பல் புறமறதி கூந்தல்
புத்திமுகங் குணதோஷ விவேகங்க ணயனம்
ஒலினிதா னங்கள்செவி கவனிப்பு நாசி
யோசனைவாய் நினைவுமிட றுற்சாக மார்பு
பாவயிராக் கியம்விரத்தி தனங்களியா னெனதென்
பனகரஞ்சிக் தனையுதரம் பகருரைகற் பனையே. 158

அறுசீர் விருத்தம்.

நினைப்புமறப் பிருகுறங்கின் மேனாப்ப ணிகழறிவா
நிதம்ப மொன்றே
சனிப்புமரிப் பின்பமிட ரிச்சைவெறுப் பறம்பாவந்
தாழ்ச்சி மேன்மை
பனிப்புமகிழ் மறைநவுவெளி யழகுகுரூ பம்பகர்தல்
பகரொ ணாதாய்த்
தணிற்பிறிதின் றென்னுமுரோ மச்செறிவி னொடு
சருவ மாமே. [முதிர்வாய்ச் 159

கலி விருத்தம்

பருவ மின்னின் படிவைப் புமானனி
புரிய மின்னும் புமானணி நத்துதல்
வருமு மூட்சு வடிவைப் பரன்பா
னுருவை வேட்ட னுயர்ந்த முமூட்சுவே. 160

வெண்பா

அன்னியமில் லாதிருப்ப வன்னியம்யா வைக்குமியான்
மன்னுகரி யென்னின் மகான்மற்றோ—ரின்ன கலல்
காதலனைச் சாராத காலையினும் பூப்புநனி
மீதுறிற்றீண் டாமைமகன் மெய். 161

கட்டளைக் கலித்துறை

னவின் சான்றியா னெனுமுத னொளினு நானே
கனவின் சாட்சியென் றிடுமிரண் டாம்பகற் கனும்
[யான்
இனது யிற்கரி யென்னுமூன் றுந்தினத் திடையும்
புனித மின்றுநான் சுயம்பெனுந் துரியமே புனிதம். 162

வெண்பா

பேதையே மங்கையுமாய்ப் பின்னி மகிழ்நனைத்தான்
ஓதிதாணுப் பேத மொழிந்துசுகம்—மீதுறுதல்
சிவனே யான்மாவாய்ச் சேர்ந்து பிரமத்தங்
காவதே சற்சிற்சுகம். 163

சிரத்தை யிருதுவுப தேசம்விந் தாகும்
கரத்தலறு மெய்ஞ்ஞானங் கர்ப்பம்—திரத்துறுவீட்
டானந்தஞ் சேயுயிர்மின் ஞரீ தடைந்திலரேல்
ஈனம்பொய்ஞ் ஞானமல டே. 164

கலிநிலைத்துறை

விரியு மாயைவா ரியிற்குரு மூர்த்தமா விளம்பும்
அரிய சேதுவின் விளங்கிடத் தன்னுடை யந்தக்
கரண மாகிய நாகதா பிதஞ்செயிற் களிப்பால்
பிரம ஞானமா மாண்மக நிலையுறப் பெறுவார். 165

வெண்பா.

விருத்திச் சுடரால் விளங்குசகத் தென்னப்
பருத்துறு தன் னீழலையே பார்க்கிற்—றரித்த
சுவா னுபவ மாந் தன் சொரூபமிளைத் துப்போம்
எவா றினுமப் யாகிமகார்க் கே. 166

உபரதிவை ராகமா வுற்றதுணைக் கொங்கைத்
தபரதிஞா னப்பகத்தள் சார்வாய்ச்—சுபரதிக
மோட்சகா மன்பிரம மூர்த்தமாஞ் சுத்தமனத்
தாட்சகா வைப்பெறலாற் றூன். 167

எப்போழ்து மூப்பி லெழின்ஞானப் பெண்ணைதிர்ங்
பப்பாஞ் சிரவணச்சம் பாடணமுங்—துப்பாய [தாற்
நேர்மனனக் கேளி நிதித்தியா சக்கலவி
சார்கசதா சாதகமைந் தர். 168

அறுசீர் விருத்தம்.

பலவிதெல்ல கிகநால் கன்மசாத் திரம்பத்திப்
பனுவல் ாக
கலையுணர் தச்சர் கொற்றர்கரு மார்கன்னோர்
ச

நிலைபுகல்சாத் திரியக்க சாலையராற் றிகழ்சார
நிதித்தி வாக்காம்
மலர்திருநாண் குருப்பதியான் மனமிடறேர் றரூது
தகர்நன் மாதர். [ளர்சா 169

எழுசீர் விருத்தம்

ஈசனாகிய ஞானதேசிக னேபுமானெனர் முமூட்சுவே
வாசவார்குழன் மாதுபோதக மங்கலத்திரு நாண் [மிசைத்
தேசுலாய விவேகமாமெழில் சீலநற்குண மொள்ளி [ழை
தாசின்ஞான விசாரம்லீலை சுவானுபூதி கலப்பரோ 170

வெண்பா.

சுவானுபூ திப்பெண்ணைச் சூழ்மோட்ச வீட்டின்
துவாரபா லர்க்கொண்டு தோய்க—தவாதவர்பேர்
சாந்திவிசா ரஞ்சாது சங்கஞ்சந் தோடமதே
போந்தினிதி ஞன்மாப் புமான். 171

அறிவாம் புருட னலைமனப்பெண் ணைகு
நெறியே யவண்மயமாய் நேரிற்—செறிசீவப்
பேதையாந் தான்றணித்தப் பெண்செயலை நோக்கி
போதமாந் தன்மயமாய்ப் போம். [னவள் 172

சின்மயவான் மாவாய்த் திகழும் தனதிறைவன்
றன்மயமாய் நிற்குஞ் சமாதிக்கற்—பின்வலிசார்
சித்தமெனு நல்லாள் செயுஞ்சங்கற் பப்படியாம்
எத்தகைய தேனு மினிது. 173

நாற்பத்தெண்சீர் விருத்தம்

திருமருவு மீசன் புமான்பிரம முயிர்மாயை
  தேகமா நித்யசன்மாத்
திரன்யா னெனும்மனு திப்பிரம ஞானமாண்
  சின்னமே சிவகருணை
தெரிவைமயல் சீவர்மட வார்களான் மாவுயிர்
  திகழ்த்தகக் கரணமுடல்யான்
சீவனெனல் பகுமூட் சுத்துவம் பருவம்
  திருந்துபர பத்தியாண்மால்
தேருமுப ரதிவிரா கந்தன மடக்கமே
  சேலையிப் போழ்து நானே
செகவிலட் சணனெனும் விசேஷபர மாங்கார
  கிரமிக வுற்றபூப்புத்
தெருண்டசின் மாத்திர சுபாவத்தன் யானெனுந்
  தெளிவாய வான்மஞானம்

திரள்பூப் படங்கிய பகம்பின் விசேஷச்
செயற்பரம வாங்காரமே

பெருகிடுதன் மாதவிடை மற்றசங் கற்பமறல்
பேசுமே காந்தமான்ம
பிரமவொற் றுமைஞான மூலமாய்ச் சின்மயம்
பெற்றயா னேசன்மயப்
பிரமமச் சன்மயப் பிரமமே சின்மயம்
பிரியா வியானென்றிடப்
பெறுநிதித் யாசமே பெண்புமான் கலவிப்
பெருக்கமாஞ் சத்தினின்றும்
பேர்சித்தி னின்றும் வெளிப்படு சுகங்களே
பெயர்சுக் கிலஞ்சோணிதம்
பின்சச்சி தானந்த சர்வபரி பூரணப்
பெருநிலைமை யாய்விருத்தி
பிறழ்சீவன் முத்திசை யோகசுக வனுபவம்
பேணுமங் கான்மபிரமப்
பிரகாச ஞானமுஞ் சீவவீ சத்துவப்
பிறிவுமந் தக்கரணமும்

நிரவிவரு மாயையுந் தோற்று திருக்குமந்
நிருவிகற் பச்சமாதி
நிகர்பக மிலிங்கமா தாடவர் சரீரங்கள்
நிகழாமை நிருவிகற்ப
நிறைசுக விருத்திசவி கற்பச் சமாதியினும்
நேர்தல்சை யோகசுகமே
நினைவா வெளிப்படல் விசேஷபர மாங்கார
நெறிபடிற் சீவன்முத்தி
நிலைபெறு வாநறிதல் பின்குூத கத்தினல்
நீள்கருக் தரியாமையாம்
நீர்மைதோற் றிடுதலந் தக்கரண மாயையது
நிபவியா பகமதனுளே
நின்றிடு மெனத்தெளிதல் மாதுபூ மான்மெய்
நெருக்கமா முன்போலநல்
நிதித்தியா சஞ்செயல் கலத்தற் கிரீடையது
நீக்கமற முயல்காலையின்
விரவுமறி வின்மகிழ்வு பின்னமாய் வெளியாம்
விசேஷபர மாங்காரமோ
மேவா தொழிந்திடச் சீவன்முத் திச்சுக
விருத்திநிலை பெற்றதுணர்தல்

விணை சுரோணித மகன்றிடுஞ் சூதகம்
விளையாமை யாற்கருப்பம்
மெய்யுற்ற தோர்ந்திடுதல் சர்வபரி பூரணை
வியன்சச்சி தானந்தமாம்
மேல்நிலைமை மட்டாய் விருத்திலய முற்றொழி
விதேகமுத் திப்பதமதோ
மிக்கசுக மாயபுத் திரனாற் பவித்திட
விளங்குதாய் தங்கைதானிவ்
விதமாயி னாரென வழங்கல்சீ வன்முத்தி
மிளிர்சுகத் தேட்டமதனால்
மீதுநிலை யுறல்காம வியலாற் சுதன்பெறல்
விவேகிப்ப துவமேயமே. 174

வெவ்வி யற்கைக ளாநரர் சூழ்பிர விர்த்தி நாடு
தவ்வ விட்டினி தாயகு ணங்கட ழைந்த சோலை
செவ்வி துற்றநி விர்த்திவ னத்திடை சென்று நின்றார்
எவ்வ மற்றவர் ஞானவி சாரமெ னுந்தவத்தே. 175

அறுசீர் விருத்தம்

தனுவாக்கு மனந்திய நெறிசெல்ல விடாதகிரி
கண்டத்தோடு

மனமோர்வா சனையுமுறு தொழித்திடலா முண்டி
வையத்தின் கண் [தமும்
கனல்போல வடுத்த வெலாந் தன்மயமாக் கொளு
காவி தோய்த்துப் [ஞானக்
புனைசாந்த வுடையேக பாவனையுட் கமண்டலமும்
பூண்பர் நீத்தோர். 176

வெண்பா

சூழமுடி வற்ற துரியாதீ தத்திசையே
கேழினுடை யாகக் கிளர்ந்திடவே—வாழும்
உவளா வகண்டவிர்த்தி யோன்றிகம்பு ரிப்பேர்
அவதூத னென்றே யறி 177

அம்மா சகலத் தயர்ந்தசெயல் பூரையெனச்
சும்மா விருப்பிற் சுழுத்தியுறல்—இம்மாயைப்
பந்தத் துழன்றதுயர்ப் பாடமையு மென்றுதனைச்
சந்திக்கின் முத்திசுகந் தான். 178

கலி விருத்தம்.

அவித்தை நித்தரை யான்மூ வவத்தையாய்ப்
பவித்து றம்பிர பஞ்சங் கனவதாம்
சுவத்தி யாய துரிய வனுபவம்
விவத்தை யற்ற விழிப்பென வோர்கவே. 179

வெண்பா

ஆகமன முடனர் னன்றென் பதுதானம்
வகமியான் சித்தே யெனன்மேற்செய்—மாகருமம்
தன்னிடத்திற் றேன்றுவன தானே யெனுமுறுதி
அன்னமுணு மாறென் றறி. 180

அறுசீர் விருத்தம்,

சத்துவச் சிந்தை நற்போ சனங்குரு
மார்க்க நெய்யால்
துய்த்திடின் விருத்தி மெய்யிற் றேற்றமா
நாம ரூபத்
தத்துறு சலம லங்க டரித்திடா
தொழிப்ப வான்ம
வித்தையாஞ் சார மாகு மேவிடா
மாயை நோயே. 181

கலிநிலைத்துறை

சத்து மாச்சித்துச் சருக்கரை யானந்தத் தனிநெய்
ஒத்த தன்சத்தி யுருவுல காமபூ பங்கள்
சித்தி ரம்பெறச் செய்துதன் னுட்கொளு மனுதி
முத்த னுதிமுத் தருக்குமுட் கொளத்தரு முறை
[யால் 182

கலி விருத்தம்

வியன்மறைப் பசுவின் விளங்குசற் கன்ம
மயமுபா சனையா மாசலத் திதய
நயமனை சுசியே ஞானமாம் பாலைக்
கயமுற விசாரக் காய்ச்சல்செய் துணலாம். 183

ஆன்ம ஞான வமுதிற் பரோட்சநீர்
தான்மு டிந்து தனியப ரோட்சத்தேம்
மேன்மி குப்ப விசாரணைக் காய்ச்சல்செய்
பான்மை பானம் பரபத்தி சீனியே. 184

அறுசீர் விருத்தம்

சிவனெனுஞ் சுதைதங்கட் காமியகன்மக் காய்ச்சலுறத்
தேசிகன்சொல்
மேவலெனும் பிரையிடப்பெற் றப்யாசி யாக்ததியாய்
விவேகமத்தால்
வீவரிய விசாரமெனுங் கடைதலில்யான் சான்றெனு [மவ்
வெண்ணெய் தானுய்த்
தேவையகண் டாகார விருத்தியெனு முருக்கலுறிற்
சிவமா நெய்யே. 185

கலி விருத்தம்.

இதயபாத்திரத் திற்பிர பஞ்சமாம்
ததியை யுண்மைவி சாரக் கடைதல்செய்
விதமு றிற்றரி யப்பர வெண்ணெய்தான்
எதிரு மாங்குமுன் னிற்கல வாதரோ 186

கொச்சகக் கலிப்பா

பொருந்தியமா கர்த்தன்மகா போகிமகாத் தியாகி
ஒருங்கிநிகழ் நவநீத முருகியநெய் யுறைநெய்
வரும்பிரம வித்துவரன் வரியானே வரிட்டன்
கரும்பிரசம் பாகினிய கட்டிசருக் கரையே. 187

வஞ்சி விருத்தம்.

சவிகற்ப சமாதிகள் கற்கண்
டவியற்கை யலாநிர்வி கற்பம்
துவியற்ற சுவைப்படி வப்பா
கிவிதச்சுவை யேபர மான்மா. 188

கலிநிலைத்துறை

சுவைதகற் கண்டுதேன் முக்கனி சீனிசந் தோடம்
மதிபச் சைக்கருப் பூரஞ்சந் தனந்தென் றன்மலர்கள்
திதிகொள் சாந்தியாழ் வேய்ங்குழல் சோதிநிட் சேபம்
ததிவி சாரணை யமிர்தங்கற் பகஞ்சாது சங்கம் 189

வெண்பா.

தூநாக வல்லி துவர்ப்பாகு நற்சுண்ணம்
பூநாற மெல்லிற் பொறிமகிழ்தல்—ஆனாத
சிடப் பிரஞ்ஞை தெளி கலையூ கங்குருசொல்
கூடத் துரியநிலைக் கோள். 190

ஞானத் தருப்பணத்தி னல்விருத்திக் கண்ணாற்சு
வானுபவ மாந்தன் னழகினைக்கண்—டானே
நிரதிசயா னந்தமகிழ் நேர்வனக்கண் ணாடி
நாதனுவாஞ் செப்பிசையு நன்கு. 191

கலி விருத்தம்

சாத்து விக மனநற் றருப்பணம்
வாய்த்த ஞானி தெரிவன் மகிழ்ந்ததில்
ஆத்த மான வகண்ட விருத்தியாங்
கூர்த்த சாயை கொடுதன் சொரூபமே. 192

இராச தந்தம சேய்ந்த விதயமாம்
விராவு பண்மை விகாரத் தருப்பணம்
வராக மூட மனோவிருத் திச்சகம்
பராவ நோக்கிப் பலவுயிர் மாழ்குமால். 193

பஞ்ச பூதம் பவுதிக மிவ்வுடல்
முஞ்சு யிர்ப்பிங் தியமன மூடமும்
விஞ்சு மாயை விசேடக்கண் ணுடியிற்
செஞ்செ வேயான் றெரியுமென் சாயையே. 194

வெண்பா

சிற்சத்திச் சூதஞ் சிவனும் பரப்பிரமத்
தற்பணத்திற் புந்தித் தகைவிழியான்—முற்பரவக்
காணுஞ் சகத்தைக் கனவா சனைமயமாய்ப்
பூணு முயிர்புறம்பே போல். 195

கலிநிலைத்துறை

இணைக்கில் வான்சிவ மதுசற்சிற் சுகசத்தி யெனுந்தர்ப்
பணத்தில் வேறறத் தன்னையே தானெனப் பார்க்கும்
அணுக்கள் பொய்சடந் துயர்மனத் தருப்பணத் [தனந்த
வணத்தெ தித்தொன்றை யானென்ப ரதுவும் [பொய்மயக்கே. 196

கலிவிருத்தம்

ஆரணத் தேர்ச்சியா மபர ஞானத்தர்
ஊரணி மணவின்வீட் டுவத்தல் செய்மகார்
பூரணன் மானுபூ தியைப்பொருத்தினோர்
தோரணப் பெருமனை சுகிக்கு மாந்தரே. 197

அறுசீர் விருத்தம்

மிருதம சினர்சி சுக்கண் மிருகமேவார்
வினரே பாலர்
இகலவாச் சற்கன் மத்த ரெழில்விளை
யாட்டு மைந்தர்
உகளுநிட் காம கன்மத் துறுபவர்
கல்வி கற்போர்
பகர்முமூட் சுக்கண் மேலாம் பயன்பெறற்
குரிய மாந்தர். 198

தத்துவ ஞானப் யாகி தக்ககா
ரியஞ்செய் பூமான்
அத்தமாம் பிரம வித்தே யடையவேண்
டியத டைந்தோன்
ஒத்துள வரன்மா செல்வ னுயர்வரி
யான்றன் மன்னன்
சத்துவ வரிட்ட னேக சக்கர
வர்த்தியன்றே. 199

கட்டளைக் கலிப்பா

ஓவியன்செய் யுருக்களுமெய்யெனு
தோர்நரர்க்கு விருப்புவெறுப்பற
மாவினைதம தாமவைமெய்யெனு
மாவின்வேட்பு வெறுப்புறுமைந்தர்தான்

பாவரென்றல் பரன்செய்சகமுமெய்
யன்றெனத்தெளி ஞானிக்கவாவெறுப்
போவவாதல் வினைதமெய்யென்றுமால்
வோர்விருப்புவெறுப்புற்றலைவதே. 200

வெண்பா.

சச்சிதா னந்தசிவந் தானாய மாந்திரிகன்
வைச்சுளதன் சத்தியா மந்திரத்தா—லச்சோ
திகழொருதா னேகால தேசம்வத் தென்ன
நிகழுருமூன் றுமே நெடிதா. 201

எழுசீர் விருத்தம்

பிரமமாம் விரைதன் னிடத்ததி சயமாய்ப்
பின்னமில் சத்தியா மையால்
அரியவிச் சுரனாந் தாருவா யவதா
ரம்பல வாங்கிளை களுமாய்த்
திருவிளை யாடற் றழைகளாய்ச் சிவத்
திரண்மல ராய்க்குருப் பழமாய்ப்
பரவியே சகப்புல் லுருவியாய்த் தோற்றப்
படினுமோர் பரிணமிப் பிலதே 202

அறுசீர் விருத்தம்.

தந்திர மாயா சத்தி தன்வச
முடைய வீசன்
இந்திர சால வித்தை யினனைத்தைக்
கண்டு மெய்யாச்
சிந்தையுற் றவாவெ றுப்புச் செய்யுமஞ்
ஞானி யோர்வில்
மைந்தர்போய் விநோத மாக்காண் மனிதர்மெய்ஞ்
ஞானத் தோரே. 203

கலிநிலைத்துறை.

விண்ட வீசனும் வித்துவா னுக்கவன் வித்தை
கண்ட ஞானசம் பன்னர்தங் கட்பிரா ரத்த
மண்டு பொன்னைநின் னுடைத்தென லாயசன் மானம்
தண்ட வின்றியே செய்துவீ டெனும்புகழ் தரிப்பார். 204

வெண்பா

சிற்சோதிப் பார்ப்பான் செடப்பிரபஞ் சப்புலையன்
றற்போனும் வேடந் தரித்துலவிப்—பிற்பாடவ்
விர்த்திவே டங்கழன் றம் மெய்ப்பிரம விப்பிரனும்
கிர்த்தியா லாமிச் செயல். 205

சுயஞ்சோதி யாந்தானே சூழ்சாக் கிரப்பேர்
நயங்கானுஞ் சொப்பனமா நாமம்—வயங்கும்
துரியநடஞ் செய்தே சுழுத்தியபி தானத்
துரியவதீ தச்சாந்த மாம். 2'6

சொல்லுயிர்நாண் சங்கற்பஞ் சூட்ச முடல்பட்டம்
ஒல்லுபிரா ணன்வா ளுள்ம்வீணை—தொல்லைவினை
மென்காற்று மாயை வெளிசீ விதம்பறத்தல்
நன்காற்று வோனிதையண் ணல். 207

கலி விருத்தம்

அடைய வுந்தே ரகமுயர் சான்றெனுந்
திடநன் னீந்த றெளிந்தோர் கடந்திடும்
விடய நீரின் மிகுமவ் வுணர்விலான்
முடிவி லாவகை மூழ்கியுண் மாழ்குமால். 208

வெண்பா

அகஞ்சான் றெனுநீந்த லப்பியா சத்தின்
மிகுஞ்சீவன் விர்த்தியலை மேவு—தொகுஞ்சித்த
வெள்ளத்தின் மூழ்கானம் மிக்கதிட நிச்சயமே.
கொள்ளற்கைத் தெப்பமுமாங் கூறு. 209

வஞ்சி விருத்தம்

புகலு மான்ம புருடனுக்–கிகலு மூர்த்தி யெழின்மனை
யகமு மங்கி யடிமையும்–உகளு மிந்த வுடலரோ. 210

கலி விருத்தம்

பிரபு வான்மாப் பெருமதி சாரதி
இரத மாமுட லிந்தியங் கந்துகம்
கருது நெஞ்சங் கலினம் விடயமே
புரிசெய் விதிமெய்ப் போத முலாவரோ. 211

விசைம னப்பரி மீதுகூ டத்தர்சிற்
குசைபொ ருத்திக் குறைவில் விவேகமாங்
கசைபி டித்துக் கடிந்து பகிர்முகத்
திசைவி சாரணைச் செண்டுய்த் துலாவுவார். 212

சகவி லட்சணன் யானெனு நாசியின்
றன்மை யொன்றி
நிகிலம் யானென வுற்றது திக்கைநெ
ருங்கு ஞான
முகமு டைப்பர மாமகங் காரமு
னைக்க ளிற்றின்
மகிழு மான்மபு மான்மிசை யுற்றுவ
யங்கு மன்றே. 213

வெண்பா

நாளமரோத் துப்பிரம நாககுரஞ் சிற்சத்தி
தாளமன தாமிச்சா சத்தியதே—மேளத்
தவில்லொபாறியென் னுங்கிரியா சத்திபிர மத்தோ
டவிர்பிறசீ வன்னெடு லாம். 214

விருத்திபிரா விற்சவ் விகற்பானு பூதி
நிருத்தமதி தப்பகலீ னீத்துத்—தெரித்த
நிருவிகற்ப மெய்நிலைமை நேரும் பிரமம்
ஒருவனகோ சொப்பனம்போ லும். 215

அறுசீர் விருத்தம்,

உடம்பென் றுரைக்கு மரங்கினிடை யுயர்ந்த
வகங்கா ரம்பிரபு
அடர்ந்து நிற்கும் விடயங்க ளவையே
பரிசா ரகர்புந்தி
நடஞ்செய் கணிகை யிந்தியங்க ணவிலுந்
தாள மத்தளிகர்
ஒடுங்கு மிவையா வும்விளக்கி யொளிருஞ்
சாட்சி தீபமரோ. 216

கலி விருத்தம்.

அன்றை நிர்விகற் பானு பவத்தினேன்
ஒன்று றங்கடத் துள்ளமர் தீபமாம்
தன்று ணைச்சக சானு பவியுயர்
குன்றின் மீது குலாவும் விளக்கரோ. 217

அறுசீர் விருத்தம்

அந்தக் கரண மடிப்புறஞ்சா ராம
லகங்கா துடல்பார்வை
தொந்தத் தானு நாசிபுடை சூழுஞ்
செம்மை மஞ்சள்பசுஞ்
சந்தத் தொடுமூ தாக்கருமைத் தருப்ப
ணங்கண் மாயைமிசைப்
பந்தத் துளைவெண் சுதரிசனம் பகர்கூ
டத்த ருட்சுடரோ. 218

வெண்பா

சரீர வகலிற் றமோகுணநீ ரோடும்
இராசதவ ழுக்கு மிலதாய்ப்—பராவியநெய்
சத்துவவி ருத்தியுயிர் தான்வத்தி வன்னிபர
வித்தை துரியம் விளக்கு. 219

கலி விருத்தம்

நிருவி கற்பச மாதிநி வாதமிவளித்
துரிய தீபம்வி ருத்திசு ருக்கமெனும்
ஒருநு ணுக்கம ருத்திமெ ளிர்ந்ததற
னெறிவி யோமமெ ருப்பின தீதமதே. 220

கலித்தாழிசை

ஆன்மா னெஞகிழி யதன்சத்தி தான்சுற்றல்
மான்மாப் பிரபஞ்சம் வட்ட வனற்கிற்றே. 221

கலி விருத்தம்.

பிழைப்ப தாமப் பியாசஞ் சிரவணம்
கழுக்கி லாமன னந்நிதித் யாசனம்
தழைச்ச மாதி சகச மிலக்கணம்
எழுத்துச்சொற்பொருள் யாப்பணி யைந்தரோ. 222

உயிரு மெய்யு முயிர்மெயு மாய்தமும்
பெயர்கொ ளக்கரம் பேசிடிற் சித்துடன்
செயிர்ச டத்தொடுஞ் சிற்சட மென்பதும்
அயரு மாயையு மாகுஞ் சவணமே. 223

பெயருடன்வினை பேசு மிடையுரி
நயம தாம்பிரஞ் ஞானம் பிரமநன்
மயவ கம்பிர மாஸ்மி தத் வம்மசி
அயலி லாவுய மான்மாப் பிரமமே. 224

வஞ்சி விருத்தம்

ஆட்சியோங் ககப்பொருள்-பூட்சியாம் புறப்பொருள்
சாட்சியான் சகத்தியான்-காட்சியீண்டு கற்கவே.
225

கட்டளைக் கலித்துறை

சத்தானு வித்தஞ்சத் தானனு வித்தஞ் சவிகற்பமாம்
நத்தாய சம்பிரஞ் ஞாத மசம்பிரஞ் ஞாதமெனல்
தத்தா நிருவிகற் பந்தா னவையாஞ் சதுர்வகைய
சித்தாஞ் சமாதிக ணூற்றிறத் தோதிடுஞ் செய்யுட்
[களே. 226

வெண்பா

தனிநிகழ்முப் பத்தாறுந் தத்துவமாந் தானே
இனிசகச நிட்டையினேந் தேழாப்—புனைசெய்பிற
தத்துவங்க ளாயுந் தயங்கிடன்முப் பானேந்தா
வைத்தவலங் கார வகை. 227

நீதிச் சவிகற்ப நிர்விகற்ப மென்னுமனு
பூதிப் பெயர்கொளிரு பூவையரைச்— சோதிப்
பிரமமெனுந் தேவன் பிரியாது தன்னை
மருவியிடப் பூணு மகிழ்ந்து. 228

கொச்சகக் கலிப்பா

அதீதநிலைச் சிவலோகத் தமர்பிரம மாமரனே
பதாகைநிரு விகற்பானு பவமேரு வச்சியின்மேய்க்
கதாதிசக சானுபவக் கயிலையுறைந் தருள்புரிவான்
விதானகசாத் தீகவுயிர் வெள்விடைமேற் றிகழ்தரு
[மால். 229

கலி விருத்தம்

அஞ்ச வத்தை யகத்துயர் சாட்சியாம்
பஞ்ச வத்திரன் பத்துத் திசைப்புயன்
வஞ்ச மோக மகிடத் தெழுந்துயில்
வெஞ்ச மற்கொ ளும் வித்தைக் கழலினே. 230

வெண்பா.

சவிகற்ப ஞானமதி தானிருவி கற்ப
நவித்தை வெய்யவனே நாடிற்— குவியுஞ்
சொருபஞா னங்கனலோன் சொல்லு மிவையே
முருமலன்முக் கண்க ளிலே. 231

அறுசீர் விருத்தம்

சலட்சண விர்த்தி வாமத் தாளதாம்
வலப்பா தந்தான்
விலட்சண விர்த்தி மேலாய் விளங்கிய
மௌனஞ் சென்னி
சுலட்சண ஞான மேனி துலங்கிட
விடப்பாற் சித்தாம்
இலட்சண வுமையை யேற்ற வெழிற்சிவஞ்
சத்தா மன்றே 232

கொச்சகக் கலிப்பா

சிற்சத்தி யோர்பாகன் சிறிதுமெனை யலதிலையென்
பொற்புச்செஞ் சடைமீது புகல்கிரியா சத்திநதி
நிற்பக்கொண் டாயிடையே நிகழ்கருமிச் சாசத்திச்
சொற்பச்சோ மனையணிந்தான் றூரியவனன் மேனி
[யனே. 233

கலி விருத்தம்

சலன மற்றுயர் சத்துவ சித்தமாம்
உலவு வெள்ளிவெற் போங்கிய சான்றரன்
இலகு மங்களத் தேற்றசிற் சத்தியாங்
குலவு பொன்மலர்க் கொன்றைத் தொடையனே. 234

சிவன் முத்தனைத் திகழ்த்திடு தந்தி
தேவ னின்னருள் செறிவுறு மவர்க்குத்
தாவி லாவதி தப்பிர மந்தான்
சேவை தந்திடு சிவபெரு மானே. 235

வெண்பா

அன்னியமொன் றின்றி யனைத்துந்தா னேநோக்கும்
உன்னியசங் கார வுருத்திரனார்—தன்னதுவில்
மோகப் பகைஞான மொய்க்கணையே வுஞ்சாத்து
விகப் பினுகமதுவே. 236

கலி விருத்தம்.

மாயை மேரு வளைத்தவன் யாவையு
மாய மார்ந்த வகண்ட விருத்திமால்
மேய பாகன் விசுத்தசங் கற்பமாம்
நேய கல்வட நீழலின் மன்னரோ. 237

வெண்பா.

மனமாங் கமட மதியெழுழி சிந்தைச்
சினமீனத் தோடகந்தைச் சீய—மெனுமிவற்றின்
சாத்திகக் கூறுந் தனியோடு கோடுவிழி
மாத்தோல்போத் தேயணிந்தான் மன். 238

அறுசீர் விருத்தம்

எதிருஞ் சத்தப் பிரமவிதி யிடநால்
வேதச் சிரமொழியத்
தனைதவிற் கிள்ளும் பரவுணர்வாந் தலையோ
டருட்கை யுழியேந்தி
இதய மனைக டொருநிகழ்ந்தே யியல்கற்
பனைமின் னார்களுடைச்
சிதைவில் வலிக ளெலாம்பலியாச் சேரக்
கவர்ந்தோன் சிற்பரனே 239

வேதமாம் விரிஞ்சன் சத்தப் பிரமமாம்
விகங்க மாயும்
எதுவின் மனமா மாயன் விவேகமா
மெறுழி யாயும்
காதனும் பரஞா னத்தீ வரையது
நண்ணு மந்தம்
ஆதியாஞ் சிரந்தாள் காணார் திசைவரம்
பறிவா ருண்டோ. 240

கலி நிலைத்துறை

பகுதி கள்ளிரு ளினுமக மகமெனும் பசாசத்
தொகுதி சூழ்தரப் பாவகங் கரநடத் தொழிலால்
நிகழ்ப ரன்சுசி மானையாஞ் சுடலையி னின்று
திகழ்சொ ரூபஞா னக்கன லாடுதல் செயுமே. 241

எழுசீர் விருத்தம்

கைப்புடன் மூன்றின் சாட்சியா னெனுஞ்சங்
கற்பமா மூவரை யொழிய
முப்புர மதிலோ டவற்றபி மான
முதிர்ந்தசங் கற்பமோய் யசுரர்
நைப்பற வழிய விருத்திஞா னப்புன்
னகைகொளு மரன்பர ஞான
வைப்பதா நுதற்கண் ணுற்சரீ ரப்பெண்
மயல்செய்வா தனைமதற் காய்ந்தான். 242

சுடர்ப்பர விசாரப் பாற்கட லெழுந்த
சூனிய பாவனை விடத்தை
விடுத்ததன் சாயை யாகிய வகண்ட
விர்த்தியாஞ் சுந்தரன் றனுற்
றெடுக்கியே கொணரச் சாட்சிவிர் தியதா
மொருமிடற் றடக்கிய பரமன்
கடத்தகங் கரமா வுரித்ததைப் பரமாங்
காரமாம் போர்வையாக் கொளுமே. 243

எண்சீர்விருத்தம்.

மண்டுசமா தியின்ஞானி யயன்சகச ஞானி
மாலிவர்பல் லோர்தமச ரீரணிரிந்தி ரியன்

எண்டகும்ப பிராணனுட னிர்க்குணனிர் மோகன்
எனும்விருத்தி யென்புகளோ டுயர்சாட்சி
[விர்த்தி
வெண்டலைகள் சிற்சத்தி நீண்கொடுமா லைகளா
வேய்ந்தகண்ட விர்த்திக்கங் காளமதன் மேலாக்
கொண்டுதனை யலதொன்று மிலையெனும்விர்த்
[திகளாங்
குந்தளருத் திரம்புனைநங் கோன்பிரம
[மொன்றே. 244

வெண்பா.

ஐந்து விருத்தியுடை யந்தக் கரணத்தான்
முந்து விளங்கு முறையான்மாச்—சந்ததமும்
பஞ்ச முகநாகப் பாம்பு தனைச்சூடி
விஞ்சு பரசிவமா மே. 245

அறுசீர் விருத்தம்.

பெருத்தசுசி மாயைமகா மேருவத னற்றேன்றும்
பிரம ஞான
உருத்திரைசேர் சிவன்பிரமஞ் சமத்துவமாந் தென்ற
[னுட
னுவகைச் சந்தார்

அருப்பொதிகை சாத்திக வுள்ளமிதிற் கூடத்த
வகத்தியற்கே
விருப்புறுகற் புலோபாமுத் திரையாண்ம வுணர்விவர்
மியமன் ஞர்க்கே. [சா 246

வெண்பா.

பிரகிருதி யீசனுயிர் பேசுமை வைந்தாங்
கரணம் பொறிபுலன்கள் காணா—வருபூதத்
தோடும் பிராண னுடலிவ் விருபத்தைந்
தாடுமகே சன்மூர்த்த மாம். 247

கலிநிலைத்துறை

சுத்த மாயைக்கல் லாலின்மூ லத்தினிற் றோன்றும்
சித்து ரூபமாந் தட்சிணு மூர்த்தியின் றிருகோக்
கொத்து நன்மன முதற்சதுர்க் கரணமென் றுரைக்
உத்த மச்சன காதிநான் முனிவர ருய்ந்தார். [கும்
248

அறுசீர் விருத்தம்

சருவ விலட்ச ணாத்துவசிக் தனையாம்
வார ணுசிநகர்
பரம்யாம் யாமப் பரமென்னும் பயிற்சி
பாகீ ரதிசத்தின்

விரிவு விசுவேச் சுரன்சித்து விசாலாட்
சித்தாய் பிரமசுகம்
பிரிவி லன்ன பூரணியம் பிகையா
முணர்வு தரிசனையே. 249

கலி விருத்தம்

ஞான தேசிக னற்சரண் காசியுள்
வான வன்மொழி வாய்மை பகீரதி
யான தன்னவ னாரு ளெய்திடு
மேன லன்விசு வேச்சுரன் பூசையே. 250

இருபத்துநான்கு சீர் ஆசிரியவிருத்தம்.

மாயையாக் தாருகா வனமேவு சங்கற்ப
மாமுனிவர் பிரவிருத்தி
மார்க்கமாந் தீயவேள் வியினின்று விடுசுட்டு
மதியரா வினைவிவேக
வான்பணிக ளாவணிந் துஞ்சினப் புலிதனை
வலித்துரித் துச்சாந் தமாம்
வத்திர மெனக்கொண்டு மஞ்ஞான முயலகனை
மன்சருவ சாட்சியானென்

ஞயசவ் வியமாம் பதத்தான் மிதித்தே
யகங்கார மழுவைச்சுய
வறிவாக வுஞ்சத்த கோடிமனு வாந்துடி
யதைச்சப்த பிரமமெனவும்
அனிர்தசட தக்கவிர்த் திச்சூல மதுசச்சி
தானந்த வுணர்வாகவும்
அலைதீ மனத்துறை தனைச்சாத்து விகமன
மாகவுஞ் சிந்தையனலைத்
தாயவிர்த் திப்போத மாயுமிச் சாபாச
சருளையருளென்னவுமொரு
தொழிலுமிலி யான்யா னனைத்துஞ்செய்
சுடர்வல மிடக்கரங்கள் [வேனெனச்
தோன்றவைத் தேமறதி யாயநகு வெண்டலை
துலங்கமவு னச்சிரத்திற்
சூடிமற் றைக்குணப் பூதங்க ணற்குணத்
தொகையெனச் சூழவுமெலாம்
எயநா னெனுமிடத் தாளெடுத் தயலல்ல
வெனுமபய மிவ்வாறுணர்ந்
திலகுநீ யேபொருளெனும்வரத முந்திகழ
விதயசிற் றம்பலத்தின்

இடைப்பிரஞ் ஞாசத்தி மகிழ்துரிய நடமே
விடும்பர சிவத்தைதயென்றும்
இயன்ஞானி யாம்வியாக் கிரபாதர் சிவயோகி
யென்பதஞ் சலிகாண்பரே. 251

கலிநிலைத்துறை

கல்லு தத்துவத் திரள்செறி முமுட்சுவின் காயத்
தில்லை யின்கணே மாயைமா விணிநணி செருக்கச்
சொல்லின் யானதீ தன்னெனு மோர்கழற் றாக்கால்
வெல்லு மீசர்பொன் மேனிமெய்ஞ் ஞானமா
[விளங்கும் 252

எழுசீர் விருத்தம்

தன்னில் யாவும் விளங்க மற்றவை
தம்மின் மேவுத றன்விசும்
பென்ன வேகமு மாய னேக
மெனக் குலாவல் கனநிகர்
இன்ன யாவு மியற்றி யொன்று
மியற்றி டாது நடேசனும்
நன்னி லைப்பிர மஞ்சி தம்பர
ஞான பூரண நண்ணுமே. 253

கலி விருத்தம்

நிருவி கற்பநன் னிட்டைபொன் மன்றவண்
துரிய நிர்த்தனஞ் சூழும் பரசிவ

தரிச னத்தைச் சகச சமாதியாம்
இரச தச்சபை யின்கணு மெய்துவார். 254

வஞ்சித்துறை.

உயர்தன் னுணர் ருயிருக்—கயலன்றெனு மபயம்
வயதீயெனும் வரதஞ்—செயுமோர்பர சிவமே. 255

கலிநிலைத்துறை.

எஞ்சு றாதனைக் கனைத்துயி றரியநான் கினைச்சார்
நைஞ்ச சீவனீச் சுரன்சிவ னவத்தைமூங் நான்காம்
மஞ்சின் மேற்சுகந் துவாதசாந் தத்தல மதுரை
பஞ்ச கோசமெய் விவேகமா மைந்திப் பதியே.
256

கலி விருத்தம்.

பூசு பஞ்சக பூருவ கோசமும்
வீசு சாட்சி விருத்திகல் லுத்தர
கோச மங்கைக் குழக னகண்டமாப்
பேசும் விர்த்திப் பெருந்துறை நாதனே. 257

நிருவி சேட நிலைமையுற் றேகமாஞ்
சொருப ஞானஞ் சுடர்சிவ லிங்கமே
சருவ மாய சகச வனுபவத்
துரிய போதந் தொழும்விக் கிரகமால். 258

எண்சீர் விருத்தம்.

ஆனந்த மயகோச சான்றேவிஞ் ஞானம்
அமருமனோ மயம்வாயு மயமன்ன மயமவ்
வுனின்சார் வெளிப்பொருண்மற் றெச்சகத்தும் [விளங்கும்
ஒருங்குணர்சான் ருய்ப்பின்ன ரொருதான்மட் [டொளிர்தல்
ஈனந்தீ ருள்ளமரு மூலசிவ மேயோன்
றிரண்டாதி யாவரண மேழும்விசே டமதாய்
மேனின்ற மூர்த்தியுமாய்த் தானேயா வருக்கும்
விளங்கியபின் மூலசிவ மாய்நிதமே வுதலே. 259

அறுசீர் விருத்தம்,

எல்லாந்தா னாய்ப்பார்த்தும் பார்க்கப்பட் டுளவனை [த்து
மிலங்கத் தன்போல்
நல்லாகா ரம்பெறுவித் தும்பரமா னந்தவரு
ணாட்டம் பெற்றும்
கல்லாமை யகற்றுவிசா லாட்சியுயர் மீனாட்சி
காமாட்சிப் பேர்
புல்லாநில் சித்துருவாஞ் சத்தியினு லதிதபரம் 260
பொருந்து மான்மா.

வெண்பா

அனுபூதி ஞானவுமை யாள்கலைக ளாகும்
துனிதீர்வை ராக்கியமாந் தூர்க்கை—தனிமை
உபாதியாங் காளியுமின் னோர்வா கனங்கள்
தபதைரி யத்தொடுபேட் டைசை. 261

சத்துச் சிவஞ்சித்தே சத்தி நிருவிகற்பத்
தொத்துளவா னந்தமே யொற்றைக்கொம்—பத்
சகசானந் தந்தானே சண்முகவன் வன்னி [தன்
மகிழ்சூடு செம்மையொளி மற்று. 262

கலிநிலைத்துறை.

சத்தி யுட்டணம் விக்கினேச் சுரநிறந் தானும்
வைத்து ளஞ்சிவா தித்தனிற் சுப்பிர மண்ய
நித்தி யப்பிர காசமே யவித்தையன் னீக்கும்
சித்த விட்டினு ளசங்கரக் கதவினைத் திறப்பின். 263

கலி விருத்தம்

சருக்கரையு ருச்சுவைத னிற்பினமி லாமை
அருட்பரனு ஞானியும மைந்ததயிர் பாகின்
இருப்பெனல ரன்சிவையு மேகர்சுவை ஞானி
கருச்சுரர்மு தன்முடிவு சர்வகண நாதன். 264

கலி விருத்தம்

மண்மெய் யிலின்யான் யானென மறைவுற் றதுவிழ
எண்மன் னுமகங் காரவி யன்மூ டிகமீதே
விண்மைச் சவிகற் பாநிர்வி கற்பக் கரநாசி
வண்மைப் பரவக மாமுக வரன்ஞா னபுமானே. 265

எழுசீர்விருத்தம்

அனுபவப் பிரம வல்லபை கணேசன்
அமர்சவி கற்பநிர் விகற்பம்
எனுமிரு ஞான சித்திபுத் திகளுக்
கிறையவன் சகசநிட் டைப்பேர்
வனமுகுங் தன்பாற் றேன்றுமுங் நான்கு
வகையவத் தானுபூ திப்பங்
கனையர்கோன் சுசிமா யைப்பணிப் பங்கஞ்
சார்நிறை மதியகட் டினனே. 266

அறுசீர் விருத்தம்.

யாவையுந் தன்னுள் ளாக்கொள் பூன்றமதி கனவுதரம்
யாக்கை தானுக்
காவகந்தைக் கயாசுரனைக் கொலும்விருத்தி ஞான
தந்தம் விர்த்தி [மொசி

ஓவநின்ற பரஞான நிலையேக தந்தமியா
 னென்றுய் மேலா
மேவுகின்ற சித்தெனும்போ தகவதனப் பரமான்மா
 விநாய கன்றுன். 267

எழுசீர்விருத்தம்.

தத்துவ ஞான மங்குசஞ் சீவ
 தயையது பாசமா மினிய
சத்துவ விருத்தி பலவபூ பங்கள்
 சாந்தநன் மோதகம் வாத
மித்தைதன் மயமுக் கண்சதுர் மறைநேதாள்
 விக்கின மாயையாம் விளையாட்
டத்தனுக் கதீத முடன்றுரி யத்தி
 னபேதஞா னந்திக் கையே. 268

வெண்பா

சுத்தப் பிரமமெனச் சொல்லும் விநாயகனுக்
கத்தமா மீரா றவத்தைகளான்—மெய்த்துநிகழ்
சாட்சித் துவங்க டமைப்பன் னிரண்டாய
காட்சியவ தாரமெனக் காண். 269

அறுசீர் விருத்தம்.

தெரிவுறுமா காமியவித் தற்றசுப வாசனைசேர்
    சித்த மாகுஞ்
சரவணப்பொய் கையிற்றோன்றிப் பிரமான்ம சாமி
    தங்க ளென்னும் [யபோ
பொருவிழியிவ் விரண்டுதிக ழறுவகைய சமாதியனு
    பூதி யாய
திருமுகங்கொண் டுயர்மாயை மயூரமிசை விளங்கு
    செவ்வேண் மன்னோ. [பாஞ் 270

அறுதிசைப் பொருட்சான் றல்ல தாறத்து
    வாவின் சாட்சி
அறுமதத் தவர்க்கு மீச னறங்கப்
    பொருளு மானோன்
அறுதொழி லாளர்க் குண்மை யறுகுண
    னவர் சத்தி
அறுவரா யாறு தாரண றுமுக
    னானா ரானே. 271

சிவனுக்கும் பரனுக்குஞ் சிவத்திநுக்குந் தனித்
திகழ்ந ஞவும் [தனியே
பாவுகன வுஞ்சுழுத்தி யுந்துரிய முமமவத்தை
பன்னி ரண்டாந்
தாவுமிவற் றின்ஞானம் பன்னிருகண் ணவைமுழு
தாஞக் கண்ட [துந்
மாவிருத்தி யாறிருதோள் சமத்துவமாங் கடப்பமலர்
வனைசிற் சேய்க்கே. 272

எண்சீர் விருத்தம்.

கிடைப்பலதத் துவமயக்கா வரண மென்னுங்
கிரவுஞ்ச கிரியதனை யவித்தை யாய
திடக்கரியா சியனழியப் பகுந்திட் டேவிட்
சேபமெனுஞ் சிங்கவத னனைமடித்தும்
வடுப்பெருக்கு மாயைச்சூ ரனைவதைக்க
வருமகண்ட வுணர்ச்சிமயில் சாட்சி விர்த்தி
நடைக்குருகும் வாகனமாய்க் கொடியாய்க் கீழ்மேல்
நண்ண நடு நிகழ்பரம்வேண் ஞான வேலோன்.
273

அறுசீர் விருத்தம்.

சடவகந்தைக் கிரவுஞ்ச கிரிதுளைத்தே யிழிசிந்தைத்
தாரு கன்றன்

னெடுமயக்க மதிச்சிங்க முகனையுங்கொன் றிருமை
தொருரூ ரைப்போழ்ந் [மனத்
திடவெழுந்த பராங்காரச் சேவல்சுத்த சங்கற்பத்
தெழின்ம யூரங்
கொடியுடன்வா கனமாக்கொள் பரமிறைவ னகத்தி
கூடத் தற்கே. [யனுங்
274

கொச்சகக் கலிப்பா

நிவிர்த்திநெறிப் பொன்னுலகி னிகழ்ந்தநிரு விகற்
[பானு
பவச்சுரகுஞ் சரிக்கிறைவன் பன்னுயிர விர்த்திவினைத்
தவக்குறவர் பால்வளர்ந்த சகசானு பவவள்ளி
உவப்புறுவோன் சலிப்பறியா வுளவரைதோ ருடு
வனே. 275

கலி விருத்தம்

விசித்திரம னேமயின்மி சைக்கரிவி சாகன்
உசிப்பரவ கக்குருகு யர்த்துணர்வு வேல்கொண்
டிசைப்பிரவி ருத்திதெரு ளின்னெடுநி விர்த்தி
வசத்தெருளென் வள்ளிசுர வாரணமகிழ்ந்தான். 276

ஓர்வ போனுற்று மோர்விலா நினைவு
சார்ம னத்தொளிர் சாட்சியா மான்மாப்
பார்வை போனின்றும் பார்க்கிலாக் கண்கள்
சேர்ம யின்மிசைத் திகழ்முரு கோனே. 277

கலித்தாழிசை

உலகஞ் சரீர முயிர்ப்பவய வத்தால்
இலகு மனமயின்மீ தேறுகுகன் சிற்சுடரே, 278

எழுசீர் விருத்தம்

உறுமுத விறுதி யேகரூ பத்வம்
உபக்கிர மோபசம் மாரம்
அறிவினப் பியாச மடிக்கடி பயிலல்
அபூர்வதை யலவுகீ கத்வம்
உறைபல மோட்சந் துதியர்த்த வாதம்
உபபத்தி யனுகூல வுவமை
மறைமொழிப் பொருடே ரிலிங்கமிவ் வாறும்
மஞ்ஞையோன் பிரதானத் தலமே. 279

கலிநிலைத்துறை

வேறு பாவனைக் கிடமின்றா னச்சுவா மிசையே
ஏறி மாயைமால் சத்தைகெய்த் தோர்கவர்ந் தியலும்
பாறி லாவனு பவசுபா லத்தினன் பரமாத்
தேறு சம்புமூர்த் தக்குரு வைரவத் தேவே. 280

தனைய லாதுல கிலையெனு மரன்சினத் தாலாம்
கினையில் பூரண விர்த்தியே வீரபத் திரதேச்
சணிய ரோட்சமோ கினியினுற் சிவத்தது சத்தை
இனிதி லங்குமெய்ந் நிச்சய மையனு ரெனலே. 281

கட்டளைக்கலித்துறை.

முரணில் விவேகம் வயிராகஞ் சாந்த முமுட்சுத் துவம்
குருவழி பாடு சிரவண ஞானக் குறிப்பழக்கம்
நார்செய் மனன நிதித்தி யுடன்மன நாசமோடே
உரைவாச னைக்ஷய மேகா தசப்பே ருருத்திரரே. 282

கலிவிருத்தம்.

வெளிய சத்துவ விர்த்திப் பயோததி
உளிமி சைக்கரி யோனுக் கபிலையாங்
தெளித ரும்பொற் றெரிவையும் பின்னையாம்
ஒளிசெய் பூமினு மோரிரு சத்தியே. 283

வெண்பா.

சத்திகளா மெண்ணில் சரங்கள் வெளியாகும்
சுத்தசங் கற்பச் சுடர்ச்சாரங்—சுத்துடனே
மன்விருத்தி ஞானவாள் வாய்த்தோ னதீதநிலை
நன்மைதரும் வைகுந்த நாடு. 284

சத்தியோ முத்திநெறி சக்கரஞா னங்கிரம
முத்திமார்க் கஞ்சங்க முற்பிரண—வத்தின்
தியானோப தேசந் திகழ்பரமொன் றென்னுந்
தயாபோத கந்தண்டு தான். 285

பிரகிருதி யைத்தனுவாய்ப் பெற்றதுபோற் றேன்
கருமமும்வே றுகாது தானுங்—கரியோனுக் [றுங்
கிச்சையாஞ் சத்தி யிலீலை துழாய்மாலிகையே
விச்சைபீ தாம்பரமோர் மின். 286

கலிவிருத்தம்.

எதில் யாவு மெனதெனும் விர்த்தியே
ஆதி சேட னதுவு மெனையலாற்
பேத மன்றெனும் பேண றிருமறு
மாத வன்பர ஞான வரதனே. 287

எனையொ ழிந்தெ தான் றிலையெனும் விர்த்தியாம்
இனிய வாலிலை யிற்பர மாதுயில்
நனவி னிற்சுழுத் திப்பத நானெலாம்
பினம தன்றெனும் பெற்றி கருடனே. 288

தனது ஞான சமுத்திரத் தூடுபோய்ப்
பணிசெய் மாயையென் பஞ்சசனைச்செகுத்
தனைய சாரசத் தப்பிர மம்மதாம்
இனிய பாஞ்சசன் யத்தரி யேகனே. 289

பன்னிருசீர்விருத்தம்

தாமத குணத்தரா நிருதர்தம் மோடிரா
சதநிர ராமசுரரும்
சாத்திக ராஞ்சுரரு முயர்ஞானி யாமரி
தனுற்சித்த நிலைவைநாட்டி
மாமறை யெனும்பயோ ததியிடைப் புத்தியெனு
மந்தர நிறுத்திமனமாம்
வாசுகியி னல்விசா ரணையெனுங் கடைதல்செய
வந்தெழச் சூனியவிடம்
எமகுரு வாஞ்சம்பு பானுறச் சாட்சியுணர்
வெனுமிடற் றுட்கொளவவர்
இனிதுமுய லப்பினும் பரஞான வமிர்தமெழ
விதனைமுன் னுறுமவ்வரி
நாமிசை யதிதமள வும்பேசி விடும்பர
ஞானமோ கினியாகமால்
நண்ணுமவ் வசுரர்க் கிலாதுணர்வை யிமையாத
நல்லமர ருக்கருளுமே. 290

அறுசீர் விருத்தம்

அனைத்துமியா னன்றென்னு முரஞ்சிறிய திருவடியா
மாஞ்ச னேயன்
கனப்படவெல் லாநானென் பதுபெரிய திருவடியாங்
கலுழ னென்றாய்
உனத்துரிய மாம்யானே யதீதமெனன் மேனோக்கு
மொருமைக் கோபி
வனப்பரமாந் தன்னிடைச்சா ரான்மநிலை கவத்துவமா
மணிமா னுக்கே. 291

பகர்சுத்தப் பிரமமெனும் விட்டுணுவே பரப்பிரமம்
பரமா னந்தர்
தொகுதேசோ மயர்பரிபூ ரணரவ்வி யாகிருதர்
சுவர்ண கர்ப்பர்
மிகவுற்ற விராட்டுடனே பிராஞ்ஞன்றை சதனோடு
விசுவ னாகும்
தகுபத்தா மவதாரஞ் சுவானுபவ மெனுமுலகோத்
தாரத் திற்கே. 292

பிரம வரிட்ட மீனாய்ப் பெருந்தத்
துவவா ரியினா

டுருவிச் சிரத்தை யின்மை யுருச்சோ
முகனை வதைத்துப்
பரிவிற் றிரும்பா நிட்டா பரனைச்
சமாதி நிலையைத்
தெரிவி யாது தெரித்த திகழ்மா
மறையுத் தரிப்பே. 293

கலி விருத்தம்

வலியச் செய்யு மகான்கள் பணிச்செயல்
மலியு மந்தர மற்றோ ரனுபவ
அலையுண் மூழ்க லறவரி யானெனும்
உலைவில் கூர்ம முவகையிற் றுங்குமால். 294

கலிநிலைத்துறை

மருவு மூடவா ரிதியுளே கவர்ந்துசென் மான
இரணி யாக்கனை வீட்டியே பயிக்கமென் றியம்பு
தரணி தன்னைமே னிறுவிடும் வரனெனுந் தனிச்சூ
கரம கிழ்ந்துசா தகர்முமூட் சுயிரெலாங் களிப்பான்.
295

வெண்பா.

அறியாமைத் தூணின் றகமலதின் றென்று
தெறிஞானங் காரநர சிம்மக்—குறிமேவித்
தெட்பிரம வித்தாமால் சீவ விரணியற்கொன்
றட்பிரக லாதனையா ளும். 296

கலி நிலைத்துறை

சாட்சி விர்த்திவா மனனனுக் கணுவெனுந் தலம்விண்
ரூட்சச் சீவனு மாவலி யடங்கிடச் சுழுத்திக்
காட்சிப் பாதல முள்வெளி வியாபகக் கழலான்
ஆட்சி யாயளந் தகண்டவோர் விந்திரற் களிக்கும். 297

அறுசீர் விருத்தம்

பின்னையெனுந் திதிக்குமிறை யாகியகா சிபனென்
பிரமத் தின்கண் [னும்
உன்னலுறு மபின்னையெனு மதிதியினல் வருங்குருவா
முபேந்தி ரன்றான்
இன்னலுயிர் மாவலியான் மூன்றவத்தை யுலகுகவர்ந்
தீச னென்னும்
அங்கிகழ்தே வேந்திரற்கீந் தவனையக மமதையினே
டடக்கிக் காக்கும். 298

கலி விருத்தம்

சித்த பூன்றவிர்த் திப்பர சிராமன்
தத்து பேதமாஞ் சத்திரி யரைக்கொன்
றொத்த சிந்தையென் றுரைக்குஞா லத்தை
கத்த றம்பர காசிபற் களித்தான். 299

அறுசீர் விருத்தம்.

மறையுணர்வா மிரேணுகையைச் சுதனென்மாய் வித்
வருவித் திட்ட [துப்பின்
இறைவிசுவா சஞ்சமதக் கினியிவனற் றெளிவுநல
மிசைந்து மன்னேற்
கறையுறக்கொல் லகந்தையர சைக்குலத்தோ
கார வித்தி [டொழியகண்டா
அறைகொள்பர சிராமன்றுன் பரமான்ம விராகவன்
னடங்கு மன்றே. [முன்
300

வெண்பா

கமித்தலுறு ஞானஞ்சங் கற்பங் கருமம்
கிமித்தயராக் கோசலைகை கேசி—சுமித்திரையே
முன்னவளுக் கேகநடு மொய்குழலா ளுக்கொருவன்
பின்னவட்கு மைந்தரிரு பேர். 301

ஆன்மா விராம னமர்விவே கம்பரதன்
மேன்மா றிலாத விருத்தியுரந்—தான்மெய்
இலக்குமணா னகு மெழில்யூகந் தானே
நலக்குரிய சத்துருக்க னன். 302

கலி நிலைத்துறை.

பொலன்வி தேகநாட் டிற்குருச் சனகன்முன் புத்தி
யலம தால்விசா ரணையுழ விருதய மாமோர்
நிலனி யற்றவே காக்கிரச் சாலினுண் ணிகழ்ச்சி
நலமென் பெட்டகத் தனுபவ சானகி நண்ணும். 303

அறுசீர் விருத்தம்

ஈசனும் யாசகற்கு நித்தியம்பூ ரணமுதலா
 விசைக்குந் தன்சீர்த்
தேசெலாந் தருபிரம மிரகுவதீ தத்தவத்தோன்
 றிறத்தில் வேறுப்
பேசொணுக் கூடத்த ரகுராமன் றனையலது
 பிறிதொன் றின்றென்
றாசுகுணியச் சிலையை முறித்தனுபூ திச்சீதை
 யணங்கை யுற்றான். 304

கலிநிலைத்துறை.

மனமென் மாருதிக் கருளுமான் மாவிரா மன்றான்
குனிசெய் புத்தியாஞ் சுக்கிரீ வனுக்கவன் கூர்மை
மனைவி யைக்கவர் கருமமாம் வாலியை மடித்துத்
தனிம றைப்பயில் வாயகிட் கிந்தையைத் தந்தான். 305

கன்ம வாலிமைந் தன்சித்த சுத்தியங் கதனோ
டின்ம திச்சுக்கி ரீவனின் பூகநல் லினமாம்
வன்மை சேர்படை சூழவத் யான்மநூல் வழக்கின்
நன்மை யாயகிட் கிந்தைவாழ் கென்றன னாதன். 306

வெண்பா.

மனமாங்கோ தண்டம் வளைத்திட்டே சிந்தைத்
தனிநாண்பூட் டிப்போதத் தன்னம்—பினையேவத்
தீப்பண் பிராக்கதரைச் செற்றுப் பரவாரி
நாப்பண் படிந்துவரு நன்கு. 307

கலிநிலைத்துறை

ஞான சாதக பூகவா னரர்திர ளலங்கொண்
டான பாதக குணவிராக் கதர்படை யழித்தோன்
பான பூருவ வாசனை மூலமா பலத்தைத்
தான ழித்தன னகண்டபோ தப்பெருஞ் சரிப்பால் 308

வெண்பா

பத்திங் தியச்சிரங்கள் பற்றிநிகழ் கோளகமே
ஒத்த மிடறுகு முள்வெளியா—வைத்திடுமவ்
விந்தியத்தி ஞேர்வோ ரிருபானு நேத்திரங்கள்
செந்தகவி ராவணற்குத் தேர். 309

அறுசீர் விருத்தம்,

தசவிந் திரிய சிரத்தனிரா சதமா
மிராவ ணதிமருள்
வசவெங் குணவா சனைநிருதர் மடியச்
சிந்தை யிலங்கையதன்
மிசைசாத் தீக விபிடணன்றன் விளங்கு
நிவர்த்தி வனத்தீரேழ்
அசைவாங் கரண வாண்டுகழி யான்ம
விராம னருளாலே. 310

பன்னிருசீர்விருத்தம்.

ஈசனுந் தசரதன் சேயாத்து மாவா
மிராமனனு பூதிஞானம்
என்றசீ தையைமணந் தேவிர்த்தி புணர்வா
மிலக்குமண னுடனிவிர்த்தி

நேசநெறி யாந்தண்ட காரணிய மேவிமுன்
நின்றசற் கன்மமான்பின்
நேர்ந்துகுரு வீகையா மச்சனகன் மின்னொழிய
நேடிவை ராகவனுமான்
தேசினாற் சங்கற்ப சிந்தினை காக்கிரத்
திருவணை புரிந்துசித்தத்
தென்னிலங் கையின்மரீஇச் சத்துவ விபீடணன்
சேர்ந்திடக் கொண்டுதமசாம்
வாசனைக் கும்பகன் னனையிரா சதவிரா
வணையுஞ் சாட்சிநோக்காம்
வன்கணையின் மாய்த்துச் சுவானுபவ மாதொடு
வருஞ்சகச நிட்டைநாடே. 311

வெண்பா

சருவாதா ரச்சுத்த சத்துவவெண் மேனி
நரனோர்சாட் சித்துவமா நாஞ்சிற்—பெருமானே
ஆகத்தஞ் ஞானநினை வாய வசுரரைக்கொல்
மாகர்த்த னாம்பலரா மன். 312

அறுசீர் விருத்தம்.

சாட்சி யுணர்வாம் யதுவமிசந் தனின்முற்
றோன்றி யகண்டமெனும்

மாட்சி விருத்தி யிடைக்குலத்தில் வளர்மா
போகிக் கிருட்டிணன்றான்
காட்சி யுறுவா சனைகளெனுங் கடிய
வசுர ரனேகரைக்கொன்
றாட்சி யகந்தைக் கஞ்சனையு மழித்தான்
ஞான விநோதனரோ. 313

எண்சீர் விருத்தம்.

ஞானப்பி யாசியராங் கோபிகைக ளிதய
நன்மனைக்கு ளுள்ளமெனு மேற்பாகத் திசைந்த
வானுங்கா ரச்சிதரின் மனம்புத்தி சித்த
வகைப்பாண்டத் துளசாத்து வீகவிருத் திப்பால் [பால்
ஆனாத சவிகற்ப வாசனையாந் ததியோ
டரியநிரு விகற்பானு பவநவநீ தத்தைத்
தானய பிரமமெனுங் கிருட்டிணனுட் கொண்டு
சாற்றியவவ் வுறிதகர்த்தே சரித்திடுமெங்
[கணுமே. 314

எழுசீர் விருத்தம்

சிரவணச் சோலை மனனவொண் சரசுத்
திரள்வழி நிதித்தியாங் கண்ணன்

தரிசனத் தோடு சமாதிலீ லைகள்சாட்
சாத்கரித் திடற்கல வியுமேல்
பிரமசா தகராங் கோபிகா மணிகள்
பெற்றன ளெளிதனு பவம்யாம்
அரியரோ வெமக்கின் னவரென வெணிற்கா
ணார்கிருட் டிணபர மான்மா. 315

அறுதிஞான கோசவீச னச்சுதப் புமானொரு
வறுதிஞான சின்னமின்ன மன்விராக முபாதித்
தறுதிகாரி கோபிமின் சமத்தர்நெஞ்ச விற்றொறும்
உறுதியல் பரானுபூதி யொண்கிரீடை செய்வனே 316

அறுசீர் விருத்தம்

இழைத்திடப்பட் டகங்கரக்கஞ் சனுக்குளநல் வாச
றிடுஞ்சந் தத்தைக் [னையென்
குழைத்தவுயிர்க் கூனியின்பாற் றன்கொடுசீ வத்து
கூனொ ழித்துத் [வமாங்
தழைத்திடுமீச் சுரனுய கிருட்டிணனவ் வகந்தைக்கஞ்
சனைக்கொன் றேபின்
கழைத்துணையான் மாவெனுநேர் வடிவினளோ டைக்
கலவி யுற்றான். [கியமாங் 317

கருமேந் திரிய சமுகவுடற் கதியா
மிடும்பா சுரற்கொன்று
பிரியா வசபை நலமுடைய பிராண
ளுகு மிடும்பியைச்சேர்ந்
தொருகான் மனவீ மன்பயந்தா னுறுசத்
தியசங் கற்பமெனும்
பரியாக் கடோற்க சனையவன்பின் பட்டான்
மறதி வேல்வரவே. 318

கட்டளைக் கலித்துறை

கந்தஞ் சுவையுரு வூறொலி யென்னுங் கடியசரா
சந்தன் பகாசுரன் வன்மணி மாலன் றனிக்கிசகன்
வெந்துரி யோதன னுமிவர்க் கொன்மன வீமனவர்
தந்திறல் யாவும்பெற் றனரே காக்கிரத் தண்டி
[னனே. 319

பன்னிரு சீர் விருத்தம்.

சூனியச் சிலையினை யடக்கியுணர் வளைவுசெய்
சுடர்மதிப் பார்த்தனிதய
சுபகுண கடாரத்து மஞ்சணீ ரதனிடைத்
தோன்றும் பரோட்சநிழலான்

மேனிலைச் சாட்சிநோக் கம்புதொட் டேநனவு
மின்கனவு துயின்மீமிசை
விட்டமூன் றிற்றனித் தனிதெளிவு சலனமயன்
மேவுமுத் துளைவழிவிடத்
தானறும் பிரமமொடு கூடத்த ஞானமாஞ்
சக்கரத் துடன்மீன்குறி
தமையகண் டாகார விர்த்தியாம் வேறுகளை
தனைவிடுத் தினிதேற் றுமெய்ஞ்
ஞானமாங் கற்பணங் கைக்குருவி னருளாக
காட்டுதுரு பதன்மகடனை
நற்பர விசாரயா கக்கன லுதித்தவளை
நண்ணல்ருக் குமசுகிர் தமே. 320

எழுசீர் விருத்தம்

இனியசாத் திக வைங்கர ணங்க
ளெனப்படும் பாண்டவ ரைவர்
அனுபவத் துறுமெய்ஞ் ஞானபாஞ் சாலி
யறிவெனுந் துகிலையா வரணம்
எனவருந் துச்சா தனனுரி காலை
எழில்கொண் ஞா னத்துரோ பதைக்கே
முனிபிறை யாங்கண் ணனதருட் பலத்தான்
முடிந்தில தறிவெனுந் துகிலே. 321

வெண்பா

அப்பிரமே யப்பிரம மாகுங் கிருட்டிணனைச்
செப்புலகெல் லாமாய்ந்து சித்தத்துட்—டுப்புறநான்
ஆகினன்வே றின்றெனக்கொண் டானல் லகங்கர
வாகியல்ச காதேவன் மன். [மாம் 322

கலி விருத்தம்

விருத்தி ஞான விதுரனுண் ணேக்ககங்
கிருட்டி ணன்போங் கிளர்ந்தவன் யுத்திவின்
முரித்து மாயைமன் முற்றுற மோனயாத்
திரைக்கு றற்கவன் சிந்தனைக் கூழ்க்கரோ. 323

கலிநிலைத்துறை

அருளி னுவிறை யாகிய வாதரா யணன்றுன்
பருவ வாசனை யாயகாந் தாரியின் பதியாங்
கரும பாவனைத் திரிதராட் டிரற்கியோ கத்தோ
டொருமை ஞானநேத் திரந்தர மறுத்தன னோர்கால் 324

எழுசீர்விருத்தம்

தத்துவக் குலத்திற் கிறுதிவிட் டேப
சகுனியைப் பரவகங் கார
கத்தனுஞ் சகாதே வன்கொலு மவித்தைக்
கன்னனை யுயர்மதிப் பார்த்தன்

னைத்தழித் திடுமா வரணதுச் சாத
னனைச்செகுத் தொளிர்மன வீமன்
சத்துரு மாயை யாகிய துரியோ
தனனையு மாய்த்தனன் றனே. 325

பன்னிருசீர்விருத்தம்

ஆவரண சத்தியாந் துச்சா தனன்மற்று
மளவுதீக் குணசோதரர்
அடருயிர்த் துரியோத னன்னவித் தைக்கன்ன
னறையும்விட் டேசபசகுனி
மேவுதத் துவசமுக மாமரசர் பலகுழு
விளங்கலா னிதயபூமி
மிகுபார மொழியும்வண ஞானத் துரோபதை
விரவுமுள் ளத்தறமகன் [யை
வெவுமன வீமன் மதிப்பற் குனன்சித்த
மெனுநகுல னங்காரமென்
றிடுசகா தேவனெனு மிவரால் விசாரமா
விசைகுருக் கேத்திரத்தே
மூவறு வகைப்பனுவ லின்கருத் தாய்வா
மொழிந்தபதி னெட்டுநாளின்
முதிரறு தியமர்முடித் தருளுங் குருக்கண்ணன்
முத்தியுட் டருமனுக்கே. 326

வெண்பா

வியன்பிரமா கார விருத்தித் திடமென்
றியம்பிடுசங் கார வியல்பின்—வயங்குநனி
மாத்தியா கிப்பெயர்கொள் வான்கற்கி சங்கற்பத்
தீத்தொழிலோர் மாய்ந்திடவந் தே. 327

அறுசீர் விருத்தம்

வேரியேழ் ஞான பூமி மேற்பரம்
வேங்க டேசன்
ஓருணர் வொழிந்து மற்றோ ருணர்வுறி
னிரண்டி னுப்பண்
சாருநிச் சலசித் தத்திற் றயங்குமான்
மாக்கா வேரி
நேரில்கொள் ளிடன றிப்பா னிகழ்ந்தசி
ரங்க மாலே. 328

கலி விருத்தம்

விடயம் பிரமம் வியன்வா சனையே
நடுவா நிசமே ஞானத் துடனே
கிடையான் மாமுக் கியமத் துவிதம்
மிடையுஞ் சுகமெண் விதலட் சுமியே. 329

வெண்பா

சாந்த விருத்திச்செந் தாமரையின் ஞானப்பொற்
காந்தையினன் மீளாக் கதித்திருவாம்—போந்தநசை
அத்திரியூர் மூடமன மாய முகடிதரும்
பெத்த நிலைத் துன்பம் பெரிது. 330

கலிநிலைத்துறை

பிரம னுக்குநான் மறைமுகஞ் சாத்திரம் பிறவோ
சரணை மாதியங் கங்கரு மம்முபா சனையோ
டரிய ஞானகாண் டந்திரி மனைவிய ராவார்
மருவு மன்னவா கனமது சத்துவ மதியே. 331

பிரம வான்மஞா னங்களிவ் விரண்டுகட் பிரிவா
மருவு நான்குமா வாக்கிய முகம்பிர மாணம்
கரமிமா றெட்டதாங் கருமஞா னத்துறை கழல்கள்
சாத வம்புய மீதமர் சுருதிபோ தனுக்கே. 332

கலி விருத்தம்

எண்டிசைப் பொருள் யாவையுந் தானெனக்
கண்டு மாயைக் கமலத் துயர்பரன்
தண்ட நாயகி சத்துவ சித்தவெண்
முண்ட கத்தெழு முத்தசங் கற்பமே. 333

கலிநிலைத்துறை

சித்த விர்த்தியா மகிழ்நகை துயரமுஞ் சினமும்
தத்து வீரமும் பயமரு வருப்பதி சயமும்
பைத்த சாந்தமு மாமயன் மைந்தரோன் பதின்மர்
வைத்த வெண்ணில்சங் கற்பமாஞ் சிருட்டியை வகுப்
[பர். 334

கலிவிருத்தம்.

கரும மாமனங் கன்பழ வாதனை
இரதி யைம்புல னேவெனு மைந்தலர்
திரண்மெய் மாதர்விட் சேபங் கணழுவிலா
வரண மோங்கிருண் மன்னுயிர் மைந்தரே. 335

வெண்பா

அஞ்ஞானங் கூற்ற னசத்துச் சடந்துக்கம்
எஞ்ஞான்றுங் கொள்சூல மிச்சையதே—இஞ்ஞாலத்
திற்பாசந் தேகோக வெண்ணாந்தண் டாமாயை
தெற்காகுந் தாமதமே தி. 336

அறுசீர்விருத்தம்

ஆயிரக் கணக்காம் விர்த்தி யானன
மனச்சே டன்றான்
மாயைஞா லத்தைத் தாங்கி மாயியா
நெடுமா லுக்கும்

பாயலா யான்மா வென்னும் பரசிவத்
தாற்பூ ணாக
மேயிடத் தரிக்கப் பட்டு விளங்கிடும்
பகுதி காணே. 337

வஞ்சிவிருத்தம்

பள்ளி யாய பயோததி
வெள்ளி வெற்பு விகங்கமும்
விள்ளில் சத்துவ விர்த்திசான்
றுள்ளின் மூவரு மோர்கவே. 338

கலி விருத்தம்

கிரவ ணஞ்செய் கிருட்டித் தொழின்மதி
பிரம தேவன் பினர்மன னத்திதி
மருவு புந்தி நன் மாய னிதித்தியாம்
விரிசங் கார விவேகம தீசனே. 339

வெண்பா

மாகர்த்தன் வேதா மகாபோகி விண்டுவாம்
சேகிற் றிகழ்மாத் தியாகியரன்—மோகஞ்
சிதறுமதி வன்னுச் சிரமிமகே சன்றுன்
றிதிகொள்சதா சிட்டன் சிவன். 340

விரிபிரம வித்து விரிஞ்சன் பிரம
வரன்மால் பிரம வரியான்—அரன்ருன்
பிரம வரிட்டன் பெயருருவில் லாவீச்
சுரனென் றறிந்தே தொழு. 341

கலிநிலைத்துறை

கூய நூற்றெட்டா முபநிடம் விட்டுணு கோவில்
மேய லோர்பர மேவியா பகப்பொருள் விரிப்பின்
ஆயி ரத்தெட்டா முபநிட தஞ்சிவா லயங்கள்
ஏயு மோர்பொருள் பிரமமங் களவுரு வினதே. 342

கலிவிருத்தம்.

மொழிமன தவித்தை தசெயன் முற்றுமற நூலின்
வழிநிகழும் விக்கிரக மன்னியுயர் சான்ருய்ச்
செழியபல பூசனை செயப்புவணி தாமே
எழில்கொள் பரன் முத்தியிவ னென்றுதிகழ் கின்ருன் 343

மயித்திரி கருணை நன் மகிழ்வு பேட்டையாம்
இயற்பொலி பிரமவித் திரி ரண்டுநீள்
செயற்படு கோபுரந் திகழ்சி வாலயம்
கயத்தினங் கியங்கள்சிற் கலைவி சாரமே. 344

எழுசீர்விருத்தம்.

நான்குசா தனநாற் கோபுர மிதய
கண்ணுமா லயமுடன் மூன்றும்
வான்பிரா காரஞ் சிரவணந் துவச
மனனமென் பதுபலி பீடம்
தான்கிளர் நிதித்தி நந்தியின் சேவை
சமாதியிச் சுரதரி சனையாம்
தேன்புரை சாட்சாத் காரமே கருணைச்
செயலினு னந்தமுற் றிடலே. 345

கலிவிருத்தம்.

இதய மாலய மேபரந் தெய்வமாம்
கதவி ரண்டகங் கார மமதைதான்
பதிய ருச்சகன் பத்திநற் றக்கணை
திதிக ருப்புர தீபமெய்ஞ் ஞானமே. 346

கொச்சகக் கலிப்பா

தினமுயரு மிராசசபை தேவசபை நிருத்தசபை
கனகசபை சிற்சபைதான் காட்டுசிர வணமனனம்
தனிநிதித்தி யாசனமே சமாதிநற்சாட் சாத்காரம்
அனகதிரு வாசியகண் டாகார விருத்தியரோ. 347

எழுசீர் விருத்தம்

சிரவண முக்கி ராணமே மனனந்
 திகழ்மடைப் பள்ளியா நிதித்தி
பரவுமா பூசைத் தலமது சமாதி
 பயில்வுறு தரிசனைக் காலம்
அருமையாஞ் சாட்சாத் காரமே பள்ளி
 யறையுயர் சகசநன் னிட்டை
விரவிய பள்ளி யெழுச்சிசிற் சுகமாம்
 விருத்தியம் பிகைபரஞ் சுடரே. 348

தெய்வமாஞ் சான்று யினருடல் கோவில்
 சிரனேத் தாரணஞ் செயலாங்
கெய்பசி யகற்ற லுடைதரல் சுண்ண
 மிழைப்பது தாகநீங் கிடநீர்
கைதரன் மெழுக்கா மலகிடல் புனலாற்
 களிப்பநா னம்புரி வித்தல்
செய்பவ ரிவையத் தேவருள் பெற்றே
 சேர்குவர் முத்திவிண் ணுலகே. 349

கலி விருத்தம்

தத்து வங்களைத் தள்ள லலகிடல்
ஒத்த சாந்தி யுணர்வு மெழுகலாம்

வைத்த நற்சுப வாசனை சேர்த்திடல்
கத்த மாலிகை கட்டி யணிதலே 350

அரிய நல்லியல் பாகிய வாசனைத்
திரவி யங்களைச் சிற்கன லோடுறப்
புரித றூபம் பொருட்குறி யாற்பர
சொருப சிந்தனை தோத்திர மாவதே. 351

தேவ தேவன் றிருமுன் னடியுறு
தாவ ரத்தின்முக் கானனி தாழ்ந்திடல்
மூவு டற்கணு முற்றபி மானமற்
றேவி டப்பரத் தோடுமொன் றுதலே. 352

வெண்பா

கோன்மிக்க மூவுடலைங் கோசம் விசாரித்தல்
தான்முக்கா லைந்து தரம்வலஞ்செய்—பான்மைத்தாம்
அவ்வுடலக் கோசமியா னன்றென் றயல்காணல்
கவ்வியமூன் றைந்துவணக் கம். 353

கலிநிலைத்துறை

சணத்தி னைம்பொறி யானல னென்னல்பஞ் சாங்க
வணக்க மைம்புல னுடனகங் கரமதி மனமும்

தணக்கும் யானல னென்றலட் டாங்கவந் தனையாம்
மணக்கு மிச்செயல் சாந்தியாந் தயைதனை வளர்க்கும் 354

வஞ்சி விருத்தம்

எந்தலோடுமிசைந்தவோன்—றுந்தி றந்தனி யஞ்சலி
சாந்த நீர்மைத யங்கிடல்—ஈந்த சிரபி டேகமே. 355

அடக்க மற்றைய ருங்குணம்
எடுத்த நற்செய லின்சொ லும்
உடுக்கை பூடண மொண்மலர்
அடுத்த சந்தமு மாமரோ. 356

துன்னக்கமழ் தூபமி றைக்கே
யன்னத்தொடு மாவநி வேதிப்
பென்னற்சுப வாசனை யேய
முன்னுற்றவை முற்றுமொர் தானே. 357

வெண்பா.

நற்குணங்க ளோடறிவு நண்ணா னறுந்தூபம்
அற்பமிலா தெல்லாந்தா னுவுணருஞ்—சற்சிந்தை
சாத நிவேதித்தல் சாந்தமனஞ் சிற்பரத்தொன்
றுதல் சசித்தீப மாம். 358

வெண்பா

மேனற் சசாதிய விர்த்தியாங் கண்டையோலி
தானுற் றிடவினிது சாத்தீக—ஞானக்
கருப்பூர தீபத்தாற் காண்பா ரசையர்
இருப்பான்ம தெய்வத்தை யே. 359

எண்சீர் விருத்தம்.

இருதயத்துண் மகாவாக்ய வனுசந்தா னம்பெற்
றியன்மனது பிறவிடய மறவேகாக் கிரமாய்
அரிதுநவ நவமாய பரஞான துரிய
வனுபவமுற் றுத்துறியா தீதநிலை பெறலே
பரிவுறுமா லயத்துட்கைம் மணியொலித்தல் செய்யப்
பராக்ககற்றிச் சாக்கிரதை யுடன்பலவாஞ் சுட
உருவமொடு மொருமுடிவா கியசுடரி னோடும் [ரின்
உறுதெய்வ தரிசனையா லுவகைபெறு மாறே. 360

கலித்துறை

பிரம கண்டையிற் சத்திநா வசைந்திடிற் பிறிவின்
மருவு மோசைசவ் விகற்பநன் னிட்டையா மற்று
நாலு மவ்வசை வற்றிடி னேரேவகை நாதம்
நிருவி கற்பமா மஃதுமற் றதீதமெய்ந் நிலையே. 361

கலிவிருத்தம்

சாத்து வீக விருத்திச் சசிதனில்
வாய்த்த ஞானக் கினியின் வடிவமாய்
மீத்து லங்கும் வியோமாக் கினிப்பர
மாத்து மாவா வதுசுடர்த் தீபமே. 362

ஆசாரிய ளுகிய பூசகனல்
எசாயவ வித்தைமெய னுந்திரையை
வீசாவொழி வித்துயர் ஞானமெனும்
தேசார்பர தேவதை சேவைசெயே. 363

அறுசீர் விருத்தம்,

சத்துவவெண் பயன்விளங்கச் சுட்டுமதி தீரொழியத்
தகர்த்தல் செய்சீ
வத்துவத்தேங் காய்சாந்த விருத்திகளா கியகனிகள்
மறையா ராய்ச்சி
யுத்தியொடு தன்பிரனை வெள்ளிலைபா கும்போத
வொளித்தீ பத்தோ
டத்தனெனு மர்ச்சகனுற் பரதெய்வத் தேற்பிப்போ
ரடைவர் வீடே. 364

கலிவிருத்தம்

அகங்கர வோடுடைப் பளவும் பத்தியா
நிகழ்ந்திடு குடுமியை நிறீஇத்த கர்த்தனும்
இகந்துள விலாங்கலி யிணைப்ப ரம்பரற்
குகந்தளிப் பார்க்கிடை யூறொன் றில்லையே. 365

கலிநிலைத்துறை

சச்சி தானந்த மயம்பர மென்றசிந் தனைமுப்
பச்சி தழ்த்தவில் வங்கொடு சிவார்ச்சனை பண்ணல்
நிச்ச பூரண சச்சிதா னந்தமா நினைத்த
விச்சை யைந்தி தழ்வில்வவர்ச் சனையென விரும்பே. 366

கலிவிருத்தம்

அகிஞ்சை யிந்திரி யங்க ளடக்கலும்
மிகுந்தி ரங்கன் மிகைபொறுத் தன்மனம்
தகைந்து நிற்ற றவமுந் தியானமும்
உகந்த சத்திய மும்மட்ட புட்பமே. 367

வெண்பா.

இதயமனைக் கண்ணிழிவாம் வாதனைமா சியாவும்
புதையா விவேகத்தாற் போக்கித்— துதைநலமாம்
வாசனைச்சாந் தான்மெழுகி மன்னகண்ட விர்த்தி
ஆசனமிட் டார்சிவங்கண் டார். [யெனும் 368

சிவமென்னல் சித்தே சிவோகஞ் சிவநீ
சிவமெல்லா மென்றுணர் நாற் சீராற்— சிவமல்லா
தொன்றுந் தெரியா வொருநிலையே மெய்வீடு
சென்ற சிவராத் திரி. 369

பந்தவிர விற்கன்மம் பத்தியோ கம்போதச்
சந்தப் பயிற்சிநாற் சாமத்தும்—முந்துபரம்
ஆகுஞ் சிவம்பொருளென் றுய்தலா ராதனையால்
எகும்பந் தம்பகல்வீ டே. 370

அறுசீர் விருத்தம்

பதினோ ராமிந் தியமனமே பகரு
மேகா தசித்திதியாம்
எதிரா மயற்சங் கற்பமொன்று மிசையா
திருத்த லுபவாசம்
நிதமா நிதித்தி யாசமரி சேவை
மறதி யறறுயினீப்
பிதன்மேன் ஞானத் துவா தசியி லெலாந்தா
னுதல் பாரணையே. 371

வெண்பா

புரமூன்றும் யானெனுந்தீப் புந்திதெறன் முக்காற்
சிரமூன்றக் குட்டிக்கொள் செய்கை—வருமூ

வவத்தையினெஞ் சோங்காதான் மாவிலொடுக் குஞ்
தவத்திரிதோப் புக்கரணங் தான். [சீர் 372

கலிநிலைத்துறை

சிவத் துவமூ லக்கன நீரற் குளசத்வ
மாவிர்த் தியெனுங் தூர்வையின் மன்னர்ச் சணமா
திவிக் கினமோ வும்வகை சித்தா யகணேசற் [யைத்
தேவர்த் தியவன் மாயையி லீலைக் கிறையன்றே. 373

எண்சீர்விருத்தம்.

அந்தக் கரணத் தெங்கக் காய்கூ
ழாசைப் பிணிநார் விசிப் பொய்மூ
கந்துக் கமதா முக்கண் மதிநீர்
கடநா னெனுமோ டொடுசத் துவநற்
சிந்தைப் பயன்மே யதுவை மறியத்
தேகங் காணற் றெறதல்பின் றிகழ்வெண்
சந்தத் ததுசிற் பரமொன் றுதலோ
தனிமா முகனுக் கினிதர்ப் பணமே. 374

வெண்பா.

தெங்கக்காய் சீவன் செறிநார் சகத்தேயோ
டங்கம் பருப்புளம தன்சக்கை—சங்கற்பம்
பான்ஞான நெய்யே பரமுறைதல் பின்சகசம்
தான்ஞான் றருகலதி தம். 375

அறுசீர் விருத்தம்,

ஒன்று மோர்கில னெனும்பசு மலத்தையாங்
குணருஞா னத்தியால்
நன்று நீற்றிடச் சச்சிதா னந்தமா
நானலான் மற்றொன்றும்
இன்றெ னத்திகழ் துரியவெண் ணீற்றையா
னேகபூ ரணனென்னத்
துன்ற மேவுமுத் தூளனத் தவர்சிவ
சொரூபமா யினர்தாமே. 376

கலி விருத்தம்.

சச்சி தானந்த தற்பரம் யானெனும்
விச்சை சத்துவ மெய்த்திரி புண்டரம்
நிச்சம் யானே நிருவிகா ரன்னெனும்
சொச்ச விர்த்தியுத் தூளன மாவதே. 377

எழுசீர் விருத்தம்

சச்சிதா னந்த மாந்தனை யொழிந்து
சற்றுமொன் றிலையென வுணரும்
விச்சையா முருத்தி ராக்கம்நின் றுதித்து
விளங்கும்யான் நீயெனுங் கருணை
மெய்ச்சலப் பிழம்பாம் யாமெலா மென்னும்
விருத்தியின் றொடர்ந்ததா ரையதாம்
நச்சுகண் டிகைபூண் பவர்சிவ மெனவெண்
ணன்குப நிடதமும் நவிலும். 378

வெண்பா

கண்மணிவெண் ணீறுமுடி காவியுடை யைந்தெழுத் [தும்
உண்மையுணர்ந் தேற்றல் உலகிற்கு—வண்மையதா
மெய்க்கருணை சாத்திகம் வேறின்மை ஞானமயம்
ஐக்கநிலைப் போதகமு மாம். 379

கலி நிலைத்துறை.

திருச்சிற் றம்பல மெனும்பதத் தின்பொருள் சிறந்த
சுருக்க மாஞ்சபை யெனல்மெய்யா யெளிதினிற் [றோன்றும்
கருத்திற் சோதிநீ யுணரெனல் பயன்முதல் கடையும்
பொருத்த லிவ்வியல் ஒருங்குமப் பயனெனப் புகறல். 380

வெண்பா

அவித்தைப் பிசாசமுடன் ஆவரண மென்னப்
பவித்தவிடம் விட்சேபப் பன்மைக்—கவர்ப்பிணியைச்
சச்சிதா னந்தசிவந் தானென்னு மஞ்செழுத்தின்
நிச்சற் றியானத்தால் நீக்கு. 381

ஏகம் அசியைக் கியமாம் பிரணவந்தான்
சோகமது நான்கத் துவமாகும்—யோக
சிவத்தின் பொருட்டாகச் சீவன் வணக்கம்
தவத்தக் கரமஞ்சு தான். 382

எண்சீர்விருத்தம்

திகழ்யாமே பரமெனுந்தா லத்தி யானஞ்
　　செய்தான்ம ஞானமுறைஞ் சுறின்ம டக்காற்
றகையாது பரமேயா மெனுஞ்சூக் கத்தால்
　　அமைபரஞா னக்கனல்வா தனைப்ப ணிக்குப்
பகைதானே பரம்யாம்யாம் பரமென் றெண்ணப்
　　பட்டவிரு தலைமணிச்சாந் தாற்றி யைக்க
சுகஞான விளங்காற்றூற் சிந்தை வெப்பந்
　　தொலைந்துபரம் யாவுமென மாயை போமே. 383

வெண்பா

சச்சிதா னந்தத் தகைமையோங் காரத்திற்
செச்சைநேர் சத்தகரஞ் சித்துகரம்—அச்சுறு
ஆனந்த மாம்மகரம் அர்த்தமான் மாவாய
தானென் றுணரத் தகும். 384

தண்மலர்ப்பொற் றாளைத் தரிப்பித்தல் மாணவனுக்
குண்மலத்தைப் போக்கல் உவன்சிரமேல்—வண்
　　　　　　　　　　　　　　　　[மைக்
கரமமைத்தல் மெய்ஞ்ஞானக் கண்ணை யளிக்கும்
வரமெனத்தான் சாற்றும் மறை. 385

கலிவிருத்தம்.

தக்கணத் திற்சிவ போகந் தந்துவாய்
மைக்குரு கிருபையா லவித்தை மாயையற்
றக்கவைக் கும்வலி தீட்சை யுண்மையாம்
புக்கமிலான் ஜெனன்றினுட் புகல் வணக்கமே. 386

வெண்பா

மொழிநூலஞ் சூக்கமுடன் மூலவுடல் நீப்பில்
ஒழியாத கூடத்த ரோடும்—அழியாப்
பிரமமது மொன்றென்று பேசாது பேசும்
கரமுறுசின் முத்திரையின் காட்டு. 387

கலி விருத்தம்

இந்தக் கைகூப் பிருவரு மொன்றெனல்
வந்தித் தாரை மறுத்துவந் தித்திடல்
உந்தத் தேரின் ஒருவர்க் கொருவர்தாம்
சொந்தத் தெய்வத் துவவுப தேசமே. 388

அறுசீர் விருத்தம்

தேகோக புத்திவிடல் அன்னமொழித் ததுசாந்த
சித்தந் தண்ணீர்
ஏகாவா றெதிர்ப்படுவ சருருகள்யா னெனுஞ்சூக்க
வெண்ணம் மூலம்

வாகார்சற் குணங்கனிசங் கற்பம்வளியிவற்றினியல்
மதித்தோர்ந் தேவே
ருகாது வியாபகத்தாற் றுணுக்காண் பதுபுசித்த
லவற்றைத் தானே. 389

எழுசீர்விருத்தம்.

தனைப்பிறர் கோபித் திடலிக ழுதலாந்
தனிவெயில் காற்றினிற் சகிப்பும்
இனிப்பென வலிய வரும்விட யப்பே
ரிமத்தில்வேட் பறலெனுங் கமிப்பும்
அனைத்துளார் தன்னைத் துதித்தலாம் மழையில்
அகந்தைதமே வாமையாம் பொறையும்
வனப்புறக் கொடுசிற் பரனையே நாடும்
மாதவ மனமுனி வரனே. 390

வெண்பா.

ஐங்கோச சான்று யமர்தல்பஞ் சாக்கினியுள்
தங்காநிற் கின்ற தவமாகும்—சிங்காத
சாந்த விருத்தி தழைந்தமதன் சான்றுதல்
போந்தசலத் துட்டவஞ்செய் பொற்பு. 391

தன்னை யுணர்தற் றவத்திற் கிடமுண்ணேக்
கென்னுங் குகைசாட்சி யின்விருத்தி—மன்னுகிரி
ஆசனஞ்சாந் தத்தருப்பை யாம்விரா கப்புலித்தோல்
தூசில் உபரதிமான் றேல். 392

கலிநிலைத்துறை

யான சங்கனு தலினென தென்படுதான் றிலையென்
றேன யந்துணர் தெளிவொரு காலினின் றிடல்மேல்
தான லாதுவே றின்மைதேர்ந் தியானெனுந் தகைபோய்
மோன மாம்நிலை சிரசில்நின் றிடுந்தவ முதிர்வே. 393

எண்ணம் மறதி யிருபுருவத் தூடுகரி
வண்ணச் சுழுமுனையின் வாய்ப்பவுளக்—கண்ணை
நிறுவிற் பராங்கார நெற்றிக்கு நேரே
எறிசிற் சுயஞ்சுடரொன் றே. 394

புந்தி விருத்திப் புகழ்நாசி யின்னுனியிற்
சிந்தையெனும் பார்வை செலுத்துங்கால்—தொந்த
ஞானச் செழுஞ்சோதி நன்கு பிறங்குமதில் மிலா
வானத் தெலாமொடுங்கும் மன். 395

அறுசீர்விருத்தம்

சங்கற்ப விகற்பப்பிங் கலையிடை நாடியில்மனமாம் தணிப்பி ரானன்
பொங்குற்றே டாதுசம பாவனையாஞ் சுழுமுனையிற் போக்கிற் சித்தப்

பங்கிற்சத் துவமூலக் கனல்ஞானக் குண்டலியைப்
பயின்றெழுப்பும்
துங்கத்தாற் றுரியாதி தப்பிரம ரந்திரத்திற்
றேய்தல் வீடே. 396

மேலிதித் தியாசனமாம் பிராணுயா மச்செயலால்
விருத்தி ஞான
மூலவனல் எழத்துரியா தீதமதி மண்டலத்தின்
முகிழ்த்துத் தோன்றுஞ்
சீலதுரி யானந்த வமிர்தமுணி லான்மாவாந்
தேகஞ் சிந்தைச்
சாலவியா தியுமவித்தை மரணமுமற் றுயர்ஞான
சார மாமே. 397

சிரவணமூ லாதாரஞ் சுவாதிட்டா னம்மனனந்
தியானந் தானே
கருதுமணி பூரகஞ்சோ பாதிகச மாதியநா
கதம் விசுத்தி
நிருவிகற்ப சமாதிசாட் சாத்கார மாஞ்ஞையிந்த
நிலையிற் றேர்ந்த
சொருபம்விநா யகனயன்மால் உருத்திரனீச் சுரன்
துவக்கு நெஞ்சே [சிவனுந் 398

வெண்பா

நிராகார நிட்கிரிய நிர்மோக ஞான
சொரூபான்மா யானென்னுஞ் சூழ்ச்சி—பராவும்

இயமமே பூரணன்யான் ஏகசுகி யென்றல்
நியமமாம் மேன்மை நிலை. 399

அறுசீர் விருத்தம்,

சற்சங்கங் கோமுகம்நல் மனனமயூ ராசனமாம்
சாட்சி விர்த்தி
அச்சந்தீர் கேசரிவே தாந்தவிசா ரஞ்சுவத்தி
காச னங்காண்
நிச்சிந்தை சுகாதனமே யேகபா வனைபதுமம்
நிதித்தி யாசம்
மெச்சும்பத் திரம்நேதி விவேகமுத்தம் பராங்காரம்
வீரந் தானே. 400

கலிநிலைத்துறை

ஏக சாட்சியா னேயெவைக் குங்கரி யெனுந்தேர்
வாகி ரேசக மெவற்றினுங் கரியதா மதுவித்
தேக சாட்சியா னெனுமுரம் பூரகந் திடத்திச்
சோக பாவனை நிலைத்திடல் கும்பகத் தொழிலே. 401

கலி விருத்தம்

தனதி டத்தெழும் யாவையுந் தானெனும்
பினமில் ஞானம் பிரத்தியா காரமாம்
வினையில் சத்துவ விர்த்தி பரத்திடைத்
தினம்நி லைத்தல் தியான வியோகமே. 402

சருவா தாரத் தனிப்பரம் யானெனுந்
திருஞா னத்தின் திடமது தாரணை

தெரியா நின்ற தியேதாத் தியானமில்
பரமா நிற்றல் பழுதில் சமாதியே. 403

கலிநிலைத்துறை

அகில கோடியண் டங்களு மைம்புலத் தவையும்
இகலு மைம்பொறி யிடையிவை நினைவகத் திதுவும்
தகும றப்பினி லடங்குமிம் மறதியுஞ் சாட்சி
புகுமி தேயணி மாவெனுஞ் சித்தியற் புதமே. 404

காய மண்மன னப்புன லதனிடைக் கரைந்தே
தூய ஞானவக் கினியினாற் சுவறிடத் துரியம்
ஆய காற்றதை யுண்டுமே லதீதவிண் ணகத்தே
ஏய நின்றடங் கிடல்மகி மாவெனு மெழிலே 405

கலி விருத்தம்

மாயை யாற்சண்ட மாருதத் தாற்சிறி
தாயி னுஞ்சலித் தற்கறி யாக்கனத்
தூய ஞான சொரூப விளக்கமே
எய சித்தி யிடைக்கிரி மாவரோ. 406

தம்ப மும்விண் ணுஞ் சங்க முருவகை
உம்ப ரும்மவற் றுள்ளும் விளங்கிடும்
பம்பு சூக்குமப் பான்மைப் பிரமமாஞ்
செம்ப தத்தின் றிகழ்ச்சி யிலகிமா. 407

வெண்பா

மனுடானந் தாதி மருவுபதி னென்றும்
பினமாகா தெந்தப் பிரமத்—தனிவாரிக்
கண்ணே துளிகளெனக் காணப் படுமதுவாந்
தெண்ணீர்மை யோர்வுபிராத் தி. 408

எல்லாந் தனதுள் ளிருப்பத்தான் யாவையினும்
புல்லாநின் றனந்த பூரணமாய்ச்—சொல்லாதி
யந்த மிலதா யறிவுருவாய் நின்றிடலே
விந்தைப் பிராகா மியம். 409

காந்தம் நிகர்தருமென் கண்ணே கருந்தாதிற்
போந்த சருவ புவனங்கள் —வாய்ந்து
செயற்படும்யா னென்றுஞ் செயேனென்னுந் தேர்
துயக்கிலதா மீசத் துவம். [வே 410

பிரமன் முதலாய்ப் பிபீலிகையந் தங்கள்
பரமப் பிரேமாஸ் பதமாய்க்—கருதுமனு
ஆதிபகி ரண்டமுடி வாயசரு வாத்துமக
போதம் வசித்துவமாம் பொற்பு. 411

குறள் வெண்பா

யானின்று தானே யெனநின்று தன்னதே
தானென்ற லீசன் சரண். 412

முற்றிற்று.

பாட்டு முதற் குறிப்பகராதி.

பாட்டு	நெம்பர்	பாட்டு	நெம்பர்
அகங்கரமண்	4	அட்டசெல்வ	15
அகங்கரச்சிர	121	அதிகாரமன	84
அகங்கரவோ	365	அதீதநிலை	229
அகஞ்சான்	209	அந்தக்கரணத்	374
அகண்டவிருத்தி	58	அந்தக்கரணமடி	218
அகிஞ்சை	367	அப்பிரமே	322
அகிலகோடி	404	அப்புறமண்	75
அசடன்	124	அம்மாசகல	178
அசத்தியஞ்சட	82	அரசியலி	16
அசுத்தகற்ப	59	அரியநல்லிய	351
அசுத்தஞ்சங்	69	அருளினாலிறை	324
அசுத்தமன	139	அவாவாமலி	44
அஞ்சனமை	116	அவிசார	13
அஞ்சவத்தை	230	அவித்தைபிரா	41
அஞ்ஞானம்	336	அவித்தைநில	112
அடக்கமற்ற	356	அவித்தைநித்	179
அடையவுங்	208	அவித்தைபிசா	381

பாட்டு	நெம்பர்
அறியாமை	296
அறிவற்றோ	50
அறிவாம்புகு	172
அறிவுபுண்ணி	33
அறிவுமகள்	157
அறிவுருவி	100
அறுதிசை	271
அனந்தன்	11
அனாதிஞான	316
அனுபவப்பிர	266
அனுபூதிஞான	261
அனைத்துமியா	291
அன்றைநிர்வி	217
அன்னியமொ	236
அன்னியமில்	161
ஆகமனமூட	180
ஆசாரிய	363
ஆச்சியோ	225
ஆயிரக்கண	337
ஆய்ந்தசட	115
ஆரணத்தேர்	197

பாட்டு	நெம்பர்
ஆரியன்	19
ஆவரணசத்	326
ஆற்றலிறை	93
ஆற்றிணிற	28
ஆனந்தமய	259
ஆன்மஞான	184
ஆன்மவுணர்	38
ஆன்மஞெகி	221
ஆன்மநெகு	6
ஆன்மநில	80
ஆன்மாபச்	72
ஆன்மாக்கு	91
ஆன்மவிசா	111
ஆன்மாவிரா	302
இக்குமனது	90
இசைதற்குண	122
இச்சகஞ்சி	106
இடைவிடா	23
இணக்கில்	196
இதயநீர்	9
இதயகும்ப	56

பாட்டு	நெம்பர்	பாட்டு	நெம்பர்
இதயஞால	75	ஈரேழுல	95
இதயமனை	118	உடம்பென்	216
இதயபாத்தி	186	உடலமாய்	61
இதயமாலய்	346	உடலுமிவே	86
இதயமனைக்	368	உடலையா	152
இந்தக்கை	388	உபரதிவை	167
இயம்பு	136	உயர்தன்னா	255
இரக்கங்	24	உயிருமெய்	223
இரவாம்	65	உயிர்கலங்	7
இராசதந்	193	உயிர்ப்பித்	110
இராசதவா	39	உலகஞ்சரீ	278
இருதயத்து	360	உலகவாச	42
இழைத்திட	317	உறுமுதலி	279
இறையருள்	123	எஞ்சுரூந	256
இனியசாத்	321	எண்ணம்மற	394
இணைசடச்	5	எண்டிசை	333
ஈசனாகிய	170	எண்ணில்	113
ஈசனாந்தச	311	எதிருஞ்சத்தப்	239
ஈசனாம்யா	304	எப்போழ்து	168
ஈசன்குறிப்	67	எல்லாந்தா	260
ஈசுரபத்தி	142	எல்லாந்தன	409

பாட்டு	நெம்பர்	பாட்டு	நெம்பர்
எனையொழிந்	288	காந்தம்	410
ஏகசாட்சி	401	காமப்பனி	49
ஏகம்அசி	382	காயமண்ட	405
ஏதில்யாவு	287	கிடைப்பல	273
ஏந்தலோடு	355	குணமிலி	125
ஐங்கோச	391	கூயநாற்	342
ஐந்தடக்கி	126	கேணியிற்	71
ஐந்துவிரு	245	கைப்புடன்	242
ஒன்றுமோர்	376	கோன்மிக்க	353
ஓசைபரிச	120	சகவிலட்ச	213
ஓர்வபோ	277	சங்கற்பவிகற்	396
ஓவியன்	200	சச்சிதானந்தசிவ	201
கண்மணி	379	சச்சிதானந்தஞா	107
கந்தஞ்சு	319	சச்சிதானந்தமய	366
கமித்தனு	301	சச்சிதானந்தகற்	377
கல்லுதத்து	252	சச்சிதானந்தமா	378
கருமமாம	335	சச்சிதானந்தத்	384
கருமேந்தி	318	சடத்துவமா	18
கன்மநினை	37	சடநீரொழிய	66
கன்மவாலி	306	சடவகந்தை	274
காதற்சனலி	109	சணத்திலை	354

பாட்டு	நெம்பர்
சத்தானுவித்	226
சத்தியமதிலே	137
சத்துச்சிவஞ்	262
சத்தியுட்டணை	263
சத்திகளா	284
சத்தியோமுத்	285
சத்துவவெண்	364
சத்துவச்சிந்	181
சத்துமாச்சி	182
சத்தேசகஞ்	2
சரீரமேசிறை	131
சரீரவகலில்	219
சருவவிலட்	249
சருவாதாரச்சு	312
சருக்கரையு	264
சருவாதாரத்தனி	403
சற்சங்கங்	400
சலச்சண	232
சலனமற்றுயர்	234
சவிகற்பசமா	188
சவிகற்பஞான	231

பாட்டு	நெம்பர்
சாட்சித்துவ	43
சாட்சிவிர்த்	297
சாட்சியுணர்	313
சாத்துவீகவி	362
சாத்துவீகம	192
சாந்தநீர்மை	146
சாந்தவிருத்	330
சான்றாய்நிற்	154
சிகண்டமயி	74
சித்தபூன்ற	299
சித்தவிர்த்	334
சிரத்தைதயிரு	164
சிரவணச்சோலை	315
சிரவணஞ்செய்	339
சிரவணமுக்கி	348
சிரவணமூலாதா	398
சிவமென்னல்	369
சிற்குணவிபு	151
சிற்சத்தி	195
சிற்சோதி	205
சின்மய	173

பாட்டு	நெம்பர்
சீரார்	1
சிவனே	85
சிவபர	143
சிவத்துவ	373
சிவர்மட	158
சிவன்முத்த	235
சிவன்முத்தி	22
சிவனெனும்	185
சீவனுக்கு	272
சுகவிச்சை	31
சுடர்பரவி	243
சுதைதகற்கண்	189
சுத்தப்பிரம	269
சுத்தசங்கற்	127
சுத்தசாத்	40
சுத்தவறி	10
சுத்தசைவர்	150
சுத்தமாயை	248
சுருதிகுரு	103
சுயஞ்சோதி	206
சுவானுபூ	171
சுழுத்தியுறு	46
சூக்குமவ	30
சூழமுடி	177
சூனியச்சி	320
சொல்லுயிர்	207
ஞானசாதகன்	308
ஞானதேசிகன்	250
ஞானத்தருப்	191
ஞானப்பி	314
தகைவிசும்	20
தக்கணத்	386
தசவிந்தி	310
தங்குதாமி	25
தண்மலர்	385
தத்துவங்களை	350
தத்துவக்குல	325
தத்துவஞானப்	199
தத்துவஞானமங்	268
தந்திரமாயா	203
தந்தையின்	35
தம்பமும்	407

பாட்டு	நெம்பர்	பாட்டு	நெம்பர்
தரளந்து	144	தீயவியல்	140
தனதுஞான	289	துரிதசிதா	128
தனதிடத்தை	402	துரியாதீத	99
தனிவிசார	29	துன்னக்க	357
தனிநிகழ்	227	தூநாகவல்	190
தனுவாக்கு	176	தெங்கக்கா	375
தனுவையா	155	தெய்வமா	349
தனைப்பிறர்	390	தெரிவுறுமா	270
தனையலாது	281	தேகமான	117
தன்னிடத்து	64	தேகோக	389
தன்னில்யாவு	253	தேவதேவ	352
தன்னையறி	119	நடுநிலை	102
தன்னைபுணா	392	நலிமறதி	32
தாமதகுண	290	நவிலுமங்	14
தாமதசெய்	101	நற்குண	358
தாவரநீர்	81	நனவாங்	83
திகழ்யாமே	383	நனவிற்	162
திருச்சிற்றம்	380	நாலாட்	130
திருமருவு	174	நாளமரோ	214
தினமுயரு	347	நான்குசா	345
தீதிரவு	45	நிபக்குரு	94

பாட்டு	நெம்பர்
நிலம்பிரம	76
நிராகார	399
நிருவிகற்பச	220
நிருவிகற்பநன்	254
நிருவிசேட	258
நிவிர்த்திநெ	275
நினைவுசன்ம	54
நினைவுமர்க்க	63
நினைப்புமறப்	159
நீதிசவிகற்	228
நேமநஞ்ச	62
பகர்சுத்த	292
பகுதிநள்ளி	241
பஞ்சபூத	194
பதினோரா	371
பத்திந்தி	309
பந்தவிரவி	370
பந்தத்துவ	104
பந்தநிவிர்	105
பரமுணர்	60
பரனுமனை	17

பாட்டு	நெம்பர்
பரஞான	12
பருவநன்	134
பருவமின்	160
பலகோடி	73
பலவித	169
பவங்களா	96
பள்ளியா	338
பாவனைப்	48
பிணிக்குதர்	34
பிரகிருதி	286
பிரகிருதியி	247
பிரபுவான்	211
பிரமநில	78
பிரமானு	148
பிரமமாம்	202
பிரமவரிட்	293
பிரமனுக்	331
பிரமவான்	332
பிரமகண்	361
பிரமன்மு	411
பிரமவிசா	145

பாட்டு	நெம்பர்	பாட்டு	நெம்பர்
பிரமவிருத்திக்	92	மட்டிணை	98
பிரமவிருத்திப்பி	132	மண்டுசமா	244
பிறப்பிளவே	47	மண்மெய்	265
பிழைப்பதா	222	மண்கல்லய	77
பின்னையெனு	298	மயித்திரி	344
புகலுமான்ம	210	மருவுமூட	295
புந்திவிருத்	395	மறையுணர்	300
புரமூன்று	372	மனமென்	305
புலையாமி	129	மனமாங்கோ	307
புளகோல்	138	மனமாங்கம	238
புறக்கரும	135	மனிதசன	87
பூசுபஞ்சக	257	மனிதபவ	89
பூதபௌதி	3	மனிதர்பவமா	36
பெத்தரிப்பி	21	மனுடானந்த	408
பெயருடன்	224	மாகர்த்தன்	340
பெருத்தசுசி	246	மாதரவா	51
பேதையே	163	மாயைமேரு	237
பைமறித்து	114	மாயையாங்	251
பொருந்திய	187	மாயையால்	406
பொலன்விதே	303	மிருதமசின	198
மங்களகர	149	மீதுறுமஞ்	133

பாட்டு	நெம்பர்
முட்டில்பர	70
முத்திமாந	97
முரணில்	282
மெய்ச்சிரத்	27
மேலைநிதித்தி	397
மேனற்சசா	359
மொழிதூலஞ்	387
மொழிமன	343
யாவையுங்	267
யானென	153
யாணின்று	412
யானசங்	393
வயிராக்கி	53
வலியச்செய்	294
விசித்திர	276
விசைமன	212
விடயத்தி	8
விடயநதி	26
விடயதீரி	108
விடயம்பி	329
விண்டவீச	204

பாட்டு	நெம்பர்
வித்தைநிதி	156
வித்தைச்சிவ	141
வியன்பிரம	327
வியன்மறை	183
விரிபிரம	341
விரியுமாயை	165
விருத்தியிரா	215
விருத்திச்சுட	166
விருத்தியிளு	68
விருத்திஞான	323
விரையவித்	79
விவேகமி	55
வீரிதய	88
வெவ்விய	175
வெளியசத்	283
வெறுப்பு	52
வேதமாமளி	147
வேதமாவிரி	240
வேரியேழ்	328
வேறுபாவனை	280